நான் ஏன் “ஓய்வுநாளை ஆசரிக்கும்” கிறிஸ்தவனாக இருக்கிறேன்?

டேன் ஜரார்ட்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

நான் ஏன் "ஓய்வுநாளை ஆசரிக்கும்" கிறிஸ்தவனாக இருக்கிறேன்?

டேன் ஜரார்ட்

நான் ஏன் "ஓய்வுநாளை ஆசரிக்கும்" கிறிஸ்தவனாக இருக்கிறேன்?

Published in English by : **Dan Jarrard**
Wilson, North Carolina

www.danjarrard.com

© Copyright 2008
Dan Jarrard

All rights reserved

No part of this book may be reproduced in any form, except for the inclusion of brief quotations in review, without permission in writing from the author / publisher.

Cover design by **Dan Jarrard**

Translation: **Mrs. Geetha Devaraj** (தமிழாக்கம்)
Mob: +91 9994766842; gitasitra@gmail.com

For Contact in India:
Dr. C. S. Immanuel EH (AM)
Mob: +91 9894235790
email: csimmanuel@gmail.com

FOR PRIVATE CIRCULATION ONLY.
THIS BOOK IS NOT TO BE SOLD.

பொருளடக்கம்

அறிமுகம் ... 7

ஏனெனில் அது ஆதியிலேயே
ஆசரிக்கப்பட்டது ... 9

ஏனெனில் அது இயேசு பெருமானால்
கடைபிடிக்கப்பட்டது ... 18

ஏனெனில் அது அப்போஸ்தலர்களால்
கைக்கொள்ளப்பட்டது ... 31

ஏனெனில் அது ஆதிகால சபையால்
கைக்கொள்ளப்பட்டது ... 48

எனது எண்ணம் ... 61

சகோதர-சகோதரிகளே,

தேவனுக்கு மகிமை உண்டாவதாக!

ஆங்கிலத்தில்: **Why I am a "Sabbath-Keeping" Christian** என்ற பெயரில் தேவ ஊழியக்காரர் **டேன் ஜெரார்ட்** அவர்களால் எழுதப்பட்டு வெளியிடப்பட்ட இந்த நூலை, தமிழில்: **நான் ஏன் "ஓய்வுநாளை ஆசரிக்கும்" கிறிஸ்தவனாக இருக்கிறேன்?** என்ற பெயரில் வெளியிட்டிருக்கிறோம். ஆண்டவர்தாமே உங்களுக்கு பிரகாசமான மனக்கண்களைத் தந்தருளுவாராக, ஆமென்.

-பதிப்பாசிரியர்

அறிமுகம்

"ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கும்" சபையின் போதனையில் வளர்க்கப்பட்ட நான், இப்போது ஓய்வுநாளை ஆசரிக்கும் கிறிஸ்தவனாக மாறினபடியால், "ஏன் சனிக்கிழமையில் ஆலயத்துக்குப் போகிறாய்? ஏன் இந்த மாற்றம்?" என்று என் குடும்பத்தினரும் நண்பர்களும் பல வருடங்களாக என்னிடம் கேட்டதுண்டு.

கிறிஸ்தவ ஜீவியம் எப்படி இருக்கிறது என்று எவரும் என்னைக் கேட்கவில்லை(எனக்குத் தெரிந்தவரை). மாறாக, வேதாகமக் கல்லூரிகளில் படித்து, போதக ஊழியம் செய்த கிறிஸ்தவன் ஏன் தனக்கு போதிக்கப்பட்ட, தான் பிறருக்குப் போதித்த "ஞாயிறு ஆசரிப்பு" பழக்கத்தை விட்டுவிட்டு, வேறொரு பழக்கத்தைப் பின்பற்றவேண்டும் என்கிற காரணத்தைக் கேட்டிருக்கின்றனர்.

"ஏன்?" என்ற கேள்விக்கு பதில்தான்-இந்தப் புத்தகம். நானும் இலட்சக்கணக்கான மற்றவர்களும் இயேசுவோடு எங்களுக்கிருக்கும் "ஓய்வுநாள் ஆசரிப்பு" என்கிற தனித்துவ உறவைக் கொண்டாடும் காரணத்தைப் பகிர்ந்துகொள்வது, உண்மையான-நேர்மையான ஆவியோடு மட்டுமே. இந்த தனித்துவத்தை இன்னும் புரிந்துகொள்ளாதவர்களைக் குற்றப்படுத்துவதோ அல்லது நியாயந்தீர்ப்பதோ என் நோக்கம் அல்ல என்பதை தயவுகூர்ந்து மனதில் கொள்ளுங்கள்.

நீங்கள் "ஓய்வுநாளை ஆசரிக்கும்" கிறிஸ்தவராக இருப்பின், நீங்கள் பயணித்துக்கொண்டிருக்கும் பாதை, தகுதியான பாதைதான் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள இந்தப் புத்தகம் உதவும் என்று நம்புகிறேன். நீங்கள் பயணிக்கும் பாதை, அதுவாகவே, "ஞாயிற்றுக் கிழமையை ஆசரிக்கும்" கிறிஸ்தவரைக் காட்டிலும் உங்களை

மேன்மையான கிறிஸ்தவராக ஆக்கிவிடாது. அதே சமயம், அவர்களைக் காட்டிலும் தாழ்வான கிறிஸ்தவராகவும் ஆக்கிவிடாது.

"ஓய்வுநாளை ஆசரிக்காத" கிறிஸ்தவராக இருப்பின், ஏன் அநேகர் விசித்திரமான இந்தப் பாதையைத் தெரிந்துகொண்டு இதில் தொடர்ந்து பயணிக்கப்போகிறார்கள் என்பதையும், அவர்களுடைய இந்த முடிவு நீங்கள் புரிந்துகொள்ள வேண்டிய ஒன்று என்பதையும் இந்தப் புத்தகம் திறந்து காண்பிக்கும் என்று நம்புகிறேன். அவர்களுடைய பாதை, அதுவாகவே, "ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கும்" உங்களைக் காட்டிலும் அவர்களை மேன்மையான கிறிஸ்தவர்களாக ஆக்கிவிடாது; அதே நேரம், தாழ்வான கிறிஸ்தவர்களாகவும் ஆக்கிவிடாது.

இந்தத் தலைப்பில் அநேக புத்தகங்கள் எழுதப் பட்டிருக்கின்றன. தெற்கு அமெரிக்காவில் சொல்லப்படுவதுபோல, சுருக்கமாகவும் இனிமையாகவும் இப்புத்தகத்தை உருவாக்க நான் தூண்டப்பட்டேன்.

கருத்தரங்கங்கள் கூட்டப்பட்டு அனல்பறக்கும் சொற்போர்கள் பல இந்தத் தலைப்பில் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட ஆவியிலிருந்து ஒதுங்கும்படிக்கும் உந்தப்பட்டேன். அதற்குப்பதிலாக, **நான் ஏன் "ஓய்வுநாளை ஆசரிக்கும்" கிறிஸ்தவனாக இருக்கிறேன்** என்பதை மாத்திரம் உங்களுடன் பகிர்ந்துகொள்ளுகிறேன்.

நான் ஏன் "ஓய்வுநாளை ஆசரிக்கும்" கிறிஸ்தவனாக இருக்கிறேன் என்பதை உங்களுடன் பகிர்ந்துகொள்ளுவதை ஒரு ஜெபத்தோடு துவங்குகிறேன்.

அன்புள்ள பரலோக தகப்பனே, *"என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக"*-(சங்கீதம் 19:14), ஆமென்.

நான் ஏன் "ஓய்வுநாளை ஆசரிக்கும்" கிறிஸ்தவனாக இருக்கிறேன்?

காரணம் 1:

ஏனெனில் அது ஆதியிலேயே ஆசரிக்கப்பட்டது

ஓய்வுநாளை ஆசரிக்கும் கிறிஸ்தவனாக மாறின சில நாட்களில் ஒரு நண்பர் என்னைப் பார்த்து: "ஏன்?" என்று கேட்டார். அதற்கு நான் விளக்கம் கொடுத்து முடிப்பதற்கு முன்பாகவே "நீ யூதனல்ல. ஓய்வுநாள் யூதர்களுக்குக் கொடுக்கப்பட்டதென்று உனக்குத் தெரியாதா?" என்றும் சினந்தார். நான் பதில் தருவதற்குமுன்பாக அவர் வேகமாகச் சென்றுவிட்டார். அதற்குப்பின் நாங்கள் இந்தத் தலைப்பைக்குறித்து மீண்டும் பேசிக்கொள்ளவே இல்லை.

அநேக கிறிஸ்தவர்கள் சொல்லும் காரணம் இது என்பதை அப்போதுதான் நான் அறிந்துகொண்டேன்.

என் நண்பரோடு நான் பகிர்ந்துகொள்ள விரும்பினது என்னவெனில், யூதர்களுக்காக ஏற்படுத்தப்பட்டது அல்ல ஓய்வுநாள்! மாறாக, **யூத இனம் தோன்றுவதற்கும் முன்பாகவே ஏற்படுத்தப் பட்டது இது** என்பதே.

ஆதியாகமம் 12-ல், ஆபிராம் அழைக்கப்பட்டதையும் தேவன் அவனோடு தமது உடன்படிக்கையை ஏற்படுத்தினதையும் வாசிக்கிறோம்.

"கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்க

ளெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்"-(ஆதியாகமம் 12:1-3).

பிறப்பின் வரிசையைப் படித்தவர்கள், ஆதியாகமம் 12-ம் அதிகாரத்தின் சம்பவங்கள் ஏறக்குறைய கி.மு. 1921-ல் நடந்திருக்க வேண்டும் என்று இசைவாகவே பேசுகிறார்கள்.

இது ஏன் முக்கியம்? மிக எளிமையான பதில்-யூதர்களின் துவக்கமே ஆபிரகாம்தான். ஆனால் **ஓய்வுநாள் ஆபிரகாமுக்கும் முன்னதாகவே இருந்தது.**

ஆதியாகமத்தின் முதல் இரண்டு அதிகாரங்கள் "சிருஷ்டிப்பின் வாரத்தை" விவரிக்கின்றன. ஆதி. 1:31-2:3 வரை வாசிப்போம்.

"அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற் காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று. இவ்விதமாக வானமும் பூமியும், அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தன. தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்."

இது ஏன் முக்கியம்? மிக எளிமையான பதில்: **""முதலாவது யூதன் தோன்றுவதற்கும்" ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பாகவே ஓய்வுநாள் ஏற்படுத்தப்பட்டது.** அது **ஆதியிலேயே** ஏற்படுத்தப்பட்டது. தேவன் ஆபிரகாமோடும் அவனது சந்ததியோடும் ஏற்படுத்தின உடன்படிக்கையின் ஒரு பகுதியாக அல்ல, அவர் உண்டாக்கின அனைத்திற்குமான அவரது கையொப்பமாக அது ஏற்படுத்தப்பட்டது. ஆதி. 2:2-"*தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு...*" என்று படிக்கிறோம்.

ஓய்வுநாளைக்குறித்துப் படிக்க ஆரம்பித்தபோது, "*தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்...*"-(ஆதி. 2:3)என்பது என் மனதில் ஏற்படுத்தின ஆழமான

தாக்கத்தை, நான் நன்கு நினைவில் வைத்திருந்தேன். அப்போது நான் "ஞாயிற்றுக் கிழமையை ஆசரித்த" கிறிஸ்தவனாக இருந்தேன்.

முதல் நான்கு நாட்களில் உண்டாக்கப்பட்டவைகளின்மேல் தேவ ஆசீர்வாதம் வைக்கப்படவில்லை என்பது எனக்கு மிக முக்கியமாகத் தெரிந்தது. "*தேவன் அது நல்லது என்று கண்டார்*" என்று வேதாகமம் சொல்வதால், தேவன் மகிழ்ந்தார் என்பதை அறிகிறோம். ஆனால் வானத்தையும் தண்ணீரையும் பூமியையும் சுதந்தரித்து பலுகிப்பெருக ஜீவராசிகளை உண்டாக்கினபோது, "*தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்*"-(ஆதி. 1:27,28) என்று வேதாகமம் சொல்லுகிறது.

இது ஏன் முக்கியம்? பதில் எளிமையானது. அவைகளின் மீதும் நம்மீதும் அவர் வைத்த ஆசீர்வாதங்களை நினைவுபடுத்தும்படியாக ஏழாம்நாளை தேவன் ஆசீர்வதித்தார். ஏற்ற துணையையும் *பலுகிப்பெருகும் ஆசீர்வாதத்தையும்* மாத்திரம் தமது சிருஷ்டிகளுக்கு அவர் தரவில்லை. மற்றொரு விசேஷமான ஈவையும் கொடுத்திருக்கிறார். அது, ஆசீர்வதிக்கப்பட்டு பரிசுத்தப்படுத்தப்பட்ட ஒரு முழு நாள். இது எனக்கு எப்படித் தெரியும்? "*மனுஷன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது*"-(மாற்கு 2:27)என்று இயேசு தாமே சொன்னதால்தான்.

ஆதியிலே, தேவன் ஓய்வுநாளை ஒரு உன்னதமான ஈவாக உண்டாக்கி, ஏற்படுத்தி, அதை மனிதனுக்குக் கொடுத்தார். இதைக் குறித்தும் சிந்தியுங்கள்.

நான் மிக எளிமையாகச் சொல்லலாம். (மிக எளிமையாக யோசிப்பவன் என்று என்னை சிலர் குற்றப்படுத்தினதும் உண்டு). ஆனால் யூத ஜாதியைத் துவக்கின ஆபிரகாமிற்கு முன்பாகவே ஆதாம் இருந்தார் என்பதை நான் நம்புகிறேன். ஏனென்றால் ஓய்வுநாள் யூதருக்காக அல்ல, **ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது.**

ஆதியிலேயே தேவன் மூன்று காரணங்களுக்காகவாவது ஓய்வுநாளை ஏற்படுத்தியிருக்க வேண்டும்:

★ தான் எவ்வளவாய் ஆசீர்வதிக்கப்பட்டவன் என்பதை **மனிதன்** நினைவுகூரும்படியாக.

* ஓய்வுக்கும், புதுப்பித்துக்கொள்வதற்கும் **மனிதனுக்கு** நேரம் கிடைக்கவேண்டும் என்பதற்காக.

* சிருஷ்டிகரோடு தொடர்பு வைத்துக்கொள்ள **மனிதனுக்கு** உதவுவதற்காக. "*ஆகையால் மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்*"-(மாற்கு 2:28) என்று அதிகாரத்தோடு இயேசு அறிவித்தார்.

தமது சிருஷ்டிப்போடு தொடர்புகொள்ளவும், தம்மைப் புரிந்துகொள்ளவும், சிருஷ்டிகரை சிருஷ்டிப்பின் ஆண்டவராகப் பணிந்துகொள்ளவும் ஏழாம்நாள் ஓய்வுநாள் ஆசரிப்பு **மனிதனுக்கு** வழிவகுக்கும் என்பதை தேவன் **ஆதியிலேயே** அறிந்திருந்தார்.

நான் ஓய்வுநாளை ஆசரிக்கும் கிறிஸ்தவனாகிவிட்டேன் என்பதைக் கண்டுகொண்ட வேறு சிலரிடமிருந்து நான் கேள்விப்பட்ட மற்றொரு காரணம்: "ஓய்வுநாள் மோசேயிடமிருந்து வந்த ஒரு சட்டம்" என்பது. வேதத்திலிருந்து நான் கண்டுகொண்ட சில கருத்துக்கள் அதோடு ஒத்துப்போவில்லை.

முதலாவது: ஓய்வுநாளை உள்ளடக்கிய பத்துக்கற்பனைகள் மோசேயிலிருந்து துவங்கவில்லை. மோசே ஏற்படுத்தின சட்டம் அல்ல அவை. மாறாக, **தேவனால் மோசேக்கு** சொல்லப்பட்டவை.

பத்துக்கற்பனைகள் புதியவைகளல்ல. ஏழாம்நாள் ஓய்வின் ஆசீர்வாதங்களை விளக்குகிற நான்காம் கற்பனை இஸ்ரவேலுக்கு கொடுக்கப்பட்ட புதிய கற்பனையெனில், மற்ற ஒன்பது கற்பனைகளும் அதைப்போலவே புதியவைகளாகத்தான் இருக்க வேண்டும்.

மற்ற ஒன்பது கற்பனைகளும் ஆதியிலிருந்து இல்லை என்று சொல்வது முறையாக இருக்குமா?

* மெய்யான தெய்வத்தையன்றி வேறே தெய்வத்தை வைத்திருப்பது சரியே - என்ற காலம் மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட நாளிலிருந்து எப்போதாவது இருந்திருக்கிறதா?

* விக்கிரகங்களை உனக்கு உண்டாக்கலாம், அதுசரியே-என்ற காலம் மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட நாளிலிருந்து எப்போதாவது இருந்திருக்கிறதா?

* கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்கலாம், அது சரியே-என்ற காலம் மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட நாளிலிருந்து எப்போதாவது இருந்திருக்கிறதா?

* உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணவேண்டியதில்லை -என்ற காலம் மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட நாளிலிருந்து எப்போ தாவது இருந்திருக்கிறதா?

* கொலை செய்யலாம், அது சரியே-என்ற காலம் மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட நாளிலிருந்து எப்போதாவது இருந்திருக்கிறதா?

* விபசாரம் செய்யலாம், அது சரியே-என்ற காலம் மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட நாளிலிருந்து எப்போதாவது இருந்திருக்கிறதா?

* களவு செய்யலாம், அது சரியே - என்ற காலம் மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட நாளிலிருந்து எப்போதாவது இருந்திருக்கிறதா?

* பொய்ச்சாட்சி சொல்லலாம், அது சரியே-என்ற காலம் மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட நாளிலிருந்து எப்போதாவது இருந்திருக்கிறதா?

* பிறனுக்குள்ளதை இச்சிக்கலாம், அது சரியே-என்ற காலம் மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட நாளிலிருந்து எப்போதாவது இருந்திருக்கிறதா?

மனிதனுக்கு நியாயமாகத் தோன்றுவதன் அடிப்படையில் மேற்சொன்ன ஒன்பது கட்டளைகளும் **ஆதியிலேயே** ஏற்படுத்தப்பட்டு, யாத்திராகமம் 20 வரை தொடர்ந்திருக்கிறது என்று சொன்னால், "*ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக*"-(யாத். 20:8) என்கிற நான்காம் கற்பனையும் அதே அடிப்படையில் **ஆதியிலேயே** ஏற்படுத்தப்பட்டு, யாத்திராகமம் 20 வரை தொடர்ந்திருக்கத்தானே வேண்டும்?

அப்படியானால் ஓய்வுநாள் யூதர்களுக்கு கொடுக்கப்பட்ட புதிய கற்பனையா?-என்பது கேள்வி அல்ல. மாறாக, ஏன் பத்துக்கற்பனைகள் கற்பலகைகளில் எழுதப்படவேண்டும்? என்பதே உண்மையான கேள்வி. இதற்கு வேதாகமம் தெளிவான பதில் தருகிறது. மலையில் தேவன் மோசேயுடன் பேசி முடிக்கும்போது, பூதக்கண்ணாடியில் பார்பதற்குச் சமமாக ஓய்வு நாளை முக்கியப்படுத்தி முடிக்கிறார். யாத்திராகமம் 31:16-18-ஐ பாருங்கள்.

"ஆகையால், இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைதோறும் ஓய்வுநாளை நித்திய உடன்படிக்கையாக ஆசரிக்கும்படி, அதைக் கைக்கொள்ளக்கடவர்கள். அது என்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கும்; ஆறுநாளைக் குள்ளே கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார் என்றார். சீனாய்மலையில் அவர் மோசேயோடே பேசி முடிந்தபின், தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளை அவனிடத்தில் கொடுத்தார்."

மோசே இல்லாதபோது ஜனங்கள் என்ன செய்தார்கள் என்பதைக் கவனியுங்கள்-யாத். 32:1-6:

"மோசே மலையிலிருந்து இறங்கிவரத் தாமதிக்கிறதை ஜனங்கள் கண்டபோது, அவர்கள் ஆரோனிடத்தில் கூட்டங்கூடி, அவனை நோக்கி: எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக் கொண்டுவந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்; ஆதலால் நீர் எழுந்து, எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டுபண்ணும் என்றார்கள். அதற்கு ஆரோன்: உங்கள் மனைவிகள் குமாரர் குமாரத்திகளுடைய காதுகளில் இருக்கிற பொன்னணிகளைக் கழற்றி, என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்றான். ஜனங்கள் எல்லாரும் தங்கள் காதுகளில் இருந்த பொன்னணிகளைக் கழற்றி, ஆரோனிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர்கள் கையிலிருந்து அவன் அந்தப் பொன்னை வாங்கி, சிற்பக்கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான். அப்பொழுது அவர்கள்: இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள். ஆரோன் அதைப் பார்த்து, அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டி, நாளைக்குக் கர்த்த ருக்குப் பண்டிகை என்று கூறினான். மறுநாள் அவர்கள் அதிகாலையில் எழுந்து, சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தினார்கள்; பின்பு, ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள்."

நான் மீண்டும் கேட்கிறேன்: """ஏன் பத்துக்கற்பனைகளை தேவன் கற்பலகைகளில் எழுதித் தரவேண்டும்? அதன் அவசியம்

என்ன? மோசே மலையிலிருந்து இறங்குமுன் ஏன் தேவன் ஏழாம்நாள் ஓய்வுநாளுக்குத் தனிக் கவனம் கொடுக்கவேண்டும்?"

பதில்: ஜனங்கள் தேவனுடைய சிந்தையின் மெய்யான சாராம்சத்தை மறந்துவிட்டனர். அதனால், தேவனுடைய சிருஷ்டி களாகிய தாங்கள் எவ்வளவாக ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்- விசேஷமானவர்கள் என்பதும் கூட அவர்கள் பார்வையிலிருந்து மறைந்துபோயிற்று.

"*அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ; எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக்கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள். அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்; அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்து கொண்டு, அதற்குப் பலியிட்டு: இஸ்ரவேலரே, உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்று சொன்னார்கள் என்றார். பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: இந்த ஜனங்களைப் பார்த்தேன்; இவர்கள் வணங்காக்கழுத்துள்ள ஜனங்கள்*"-யாத். 32:7-9 என்றார்.

இரண்டாவது: தேவன் மோசேயிடம் யாத். 20-ல் எழுதப்பட்டிருந்த பத்துக்கற்பனைகளை கொடுப்பதற்கும் முன்பாகவே அதன் ஒரு பங்காகிய ஓய்வுநாள் கொள்கை கடைபிடிக்கப்படவேண்டியதாக இருந்தது. எகிப்திலிருந்து புறப்பட்டு, சிவந்தசமுத்திரத்தைக் கடந்த சில நாட்களிலே இஸ்ரவேலர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் எதிராக முறுமுறுக்கத் துவங்கினார்கள். அவர்கள் பசியடைந்து, அந்தச் சூழ்நிலைக்காக மோசேயைக் குற்றப்படுத்தினார்கள். இந்த வனாந்திரத்தில் பசியினால் சாவதைக்காட்டிலும் எகிப்திலேயே செத்துப்போயிருந்தால் நலமாயிருந்திருக்கும் என்றார்கள்.

தேவன் காடைகளையும் வானத்திலிருந்து அப்பத்தையும் அனுப்பி, அவர்களை விடுவிப்பதாக வாக்குக்கொடுத்தார்-(யாத். 16:4,13). அப்பத்தைச் சேகரிப்பது எப்படியென்ற அறிவுரை விளக்கமாக கொடுக்கப்பட்டது. வாரத்தின் 6-ம் நாளில் இரண்டு மடங்காக சேகரிக்கவேண்டியது ஏன் மிக முக்கியம் (யாத். 16:22) என்ற கேள்விக்கு மோசே சொன்னது:

“அவன் அவர்களை நோக்கி: கர்த்தர் சொன்னது இதுதான்; நாளைக்குக் கர்த்தருக்குரிய பரிசுத்த ஓய்வுநாளாகிய ஓய்வு; நீங்கள் சுடவேண்டியதைச்சுட்டு, வேவிக்கவேண்டியதை வேவித்து, மீதியாயிருக்கிறதையெல்லாம் நாளைமட்டும் உங்களுக்காக வைத்து வையுங்கள் என்றான். மோசே கட்டளையிட்டபடியே, அதை மறுநாள் வரைக்கும் வைத்துவைத்தார்கள்; அப்பொழுது அது நாறவும் இல்லை, அதிலே பூச்சிபிடிக்கவும் இல்லை. அப்பொழுது மோசே: அதை இன்றைக்குப் புசியுங்கள்; இன்று கர்த்தருக்குரிய ஓய்வுநாள்; இன்று நீங்கள் அதை வெளியிலே காணமாட்டீர்கள். ஆறுநாளும் அதைச் சேர்ப்பீர்களாக; ஏழாம்நாள் ஓய்வுநாளாயிருக்கிறது; அதிலே அது உண்டாயிராது என்றான். ஏழாம்நாளில் ஜனங்களில் சிலர் அதைச் சேர்க்கப் புறப்பட்டார்கள்; அவர்கள் அதைக் காணவில்லை. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: என் கட்டளைகளையும் என் பிரமாணங்களையும் கைக்கொள்ள எந்தமட்டும் மனதில்லா திருப்பீர்கள்? பாருங்கள், கர்த்தர் உங்களுக்கு ஓய்வுநாளை அருளினபடியால், அவர் உங்களுக்கு ஆறாம் நாளில் இரண்டு நாளுக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுக்கிறார்; ஏழாம்நாளில் உங்களில் ஒருவனும் தன் தன் ஸ்தானத்திலிருந்து புறப்படாமல், அவனவன் தன் தன் ஸ்தானத்திலே இருக்கவேண்டும் என்றார். அப்படியே ஜனங்கள் ஏழாம்நாளில் ஓய்ந்திருந்தார்கள்” யாத்திராகமம் 16:23-30.

நூற்றுக்கணக்கான வருடங்களாக அடிமைகளாயிருந்த காலத்தில், அதிகநேரம் உழைக்கும்படி எகிப்தியர்களுடைய கட்டளைகளினால் ஜனங்கள் கட்டாயப்படுத்தப்பட்டிருந்தார்கள். எனவே, ஏழாம்நாள் ஓய்வுநாளை ஆசரிக்க அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்காது. ஒருவேளை கொடுக்கப்பட்டிருந்தால், அது, ஓய்வுநாள் சரியே என்று எகிப்தியர்கள் ஏற்றுக்கொண்டதற்கு சமமாகியிருந்திருக்கும். மேலும் சிருஷ்டிப்பின் காலத்திலேயே, **ஆதியிலேயே** ஏழாம்நாள் ஓய்வை ஏற்படுத்தின தேவனை அவர்கள் அடையாளம் கண்டுகொண்டதாகவும் பொருள்பட்டிருக்கும். எப்படி சகலமும் துவங்கியது என்று அவர்களுடைய மார்க்கம் போதித்த கொள்கைகளை வெளிப்படையாக மீறுவதற்கும் வழி நடத்தியிருக்கும்.

இப்போதோ, வானத்திலிருந்து அப்பம் அனுப்பி, பரிசுத்த ஓய்வுநாள் ஓய்வின் நன்மைகளையும், "*இது கர்த்தருக்குரிய பரிசுத்த ஓய்வுநாளாகிய ஓய்வு*"-(யாத். 16:23) என்பதையும் தேவன் அவர்களுக்கு நினைவுபடுத்தினார். மேலும் **ஓய்வுநாள் தேவன் மனுக்குலத்திற்கு அளித்த ஈவு** என்பதையும், இஸ்ரவேலர்கள் மனுகுலத்தின் முக்கியமான அங்கம் என்பதையும் நினைவுபடுத்தினார். "*பாருங்கள், கர்த்தர் உங்களுக்கு ஓய்வுநாளை அருளினபடியால்...*"-(யாத். 16:29).

யாத்திராகமம் 20-ல் எழுதப்பட்டிருக்கிற பத்துக்கற்பனைகளை மோசேயிடம் சொல்வதற்கு முன்பே ஓய்வுநாள், தமது கற்பனைகளின், தமது கட்டளை அமைப்பின் முக்கியமான பகுதி என்பதை மிகத் தெளிவாக தேவன் காண்பித்தார். "*ஏழாம்நாளில் ஜனங்களில் சிலர் அதைச் சேர்க்கப் புறப்பட்டார்கள்; அவர்கள் அதைக் காணவில்லை. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: என் கட்டளைகளையும் என் பிரமாணங்களையும் கைக்கொள்ள எந்தமட்டும் மனதில்லாதிருப்பீர்கள்?*"-(யாத். 16:27,28) என்றார்.

நான் ஏன் "ஓய்வுநாளை ஆசரிக்கும்" கிறிஸ்தவனாக இருக்கிறேன்?

* **ஓய்வுநாள் ஆதியிலேயே கடைபிடிக்கப்பட்டது** என்பதை வேதாகமத்திலிருந்து கண்டுகொண்டதால், நான் ஓய்வுநாளை ஆசரிக்கும் கிறிஸ்தவனாக இருக்கிறேன்.

* அது யூதர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒன்றல்ல - **யூத இனம் தோன்றுவதற்கும் முன்பாகவே அது இருந்தது** என்பதையும், அது சிருஷ்டிகரால் ஏற்படுத்தப்பட்டது என்பதையும், வேதாகமத்திலிருந்து கண்டுகொண்டதால், நான் ஓய்வுநாளை ஆசரிக்கும் கிறிஸ்தவனாக இருக்கிறேன்.

* ஓய்வுநாள் மோசேயினால் இயற்றப்பட்ட சட்டமல்ல; **தேவன் மோசேக்கு கட்டளையிடும் முன்பாகவே ஓய்வுநாள் இருந்தது** என்பதை வேதாகமத்திலிருந்து கண்டுகொண்டதால், நான் ஓய்வுநாளை ஆசரிக்கும் கிறிஸ்தவனாக இருக்கிறேன்.

நான் ஏன் "ஓய்வுநாளை ஆசரிக்கும்" கிறிஸ்தவனாக இருக்கிறேன்?

காரணம் 2:

ஏனெனில் அது இயேசு பெருமானால் கடைபிடிக்கப்பட்டது

கல்லுாயில் படித்து பட்டம்பெற்று வெளியே வந்து, அநேக வருடங்களாக போதகனாக இருந்தபோது, அநேக உண்மைகளை கற்றுக்கொண்டேன். எனினும் மிகப் பெரிய பாடத்தை அதற்குப்பின்பு தான் கற்றுக்கொள்ளவேண்டியிருந்தது. அதென்னவெனில், இன்னும் நான் அறியாத அநேக உண்மைகள் இருக்கின்றன என்பதுதான். இதுதான், பேராசிரியர்களால் எனக்குப் போதிக்கப்பட்ட வேதாகமக் கோட்பாடுகளை வெளியுலகத் தாக்கமின்றி சோதித்துப்பார்க்கும்படி என்னைத் தூண்டியது.

அப்படிச்செய்தபோது, ஒரு முள் என்னைக் குத்திக்கொண்டே இருந்தது. அது கர்த்தருடைய நாளைக் குறித்த முள். நான் அதிகமாகப் பயப்பட்டாலும், உடனேயோ அல்லது சற்றுத் தாமதித்தாவது, மனித பாரம்பரியத்திலல்ல வேதவார்த்தைகளின் வெளிச்சத்தில் அதை ஆராய வேண்டும் என்று உணர்ந்தேன். கடைசி தலைப்புகளில் ஒன்றாக அதைத் தேடிப்பார்க்கத் துவங்கினேன். இது என் வாழ்க்கையை வியத்தகு விதத்தில் மாற்றி அமைக்கும் என்பதை என் மனதின் ஆழத்தில் நான் அறிந்திருந்தேன் என்று நினைக்கிறேன்.

எனவே, **கிறிஸ்தவர்களின் ஓய்வுநாள்: ஞாயிற்றுக் கிழமையா அல்லது சனிக்கிழமையா** என்பதே என்னுடைய இடைவிடாத சிந்தனையாக இருந்தது. நான் சரியாகவே நினைத்தேன்! அதிகமான ஆராய்ச்சிக்குப் பின்பாக வேதாகமக் கொள்கையின் அடிப்படையில் மிகப் பெரிய ஒரு தீர்மானத்தை எடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன்.

என் பயணம் இரண்டு பெரிய கேள்விகளைச்சுற்றி அமைந்தது.

1. **பழைய ஏற்பாட்டின் ஓய்வுநாள் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவால் உறுதிப்படுத்தப்பட்டதா?**

2. **பழைய ஏற்பாட்டின் ஓய்வுநாள் அப்போஸ்தலர்களால் கடைபிடிக்கப்பட்டதா?**

இந்த அதிகாரத்தில் முதல் கேள்வியைக் குறித்தும், அடுத்த அதிகாரத்தில் இரண்டாம் கேள்வியைக் குறித்தும் பார்க்கலாம்.

கேள்வி 1:

பழைய ஏற்பாட்டின் ஓய்வுநாள் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவால் உறுதிப்படுத்தப்பட்டதா?

கிறிஸ்துவினுடைய மரணம் உயிர்த்தெழுதலுக்குப்பின் நாம் ஏழாம்நாள் ஓய்வுநாளால் கட்டப்பட்டிருக்கவில்லை என்பதாக நான் படித்த புத்தகங்களையும் கேட்ட போதகங்களையும் யோசித்துப் பார்த்ததை நினைவுகூருகிறேன். இது, ஏழாம்நாள் ஓய்வு, யூதர்களின் சட்ட அமைப்பில் இருந்த ஒன்று; கிறிஸ்தவர்களாகிய நாம் இப்போது கிருபைக்குட்பட்ட அமைப்பிலிருக்கிறோம் என்கிற கருத்தின் அடிப்படையில் இருக்கிறது. மேலும், சட்டதிட்டங்கள் "சிலுவையில் அறையப்பட்டன;" அதற்குப் பதிலாக மேலான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றும்கூட வாதிடப்படுகிறது.

தேவனால் மோசேக்கு கொடுக்கப்பட்ட சட்டங்களின் (யாத். 20) ஒரு பகுதிதான் ஓய்வுநாள் என்று எனக்குப் போதிக்கப்பட்டும், நான் மற்றவர்களுக்குப் போதித்தும்வந்ததால், புத்தகங்களாலும் போதகர்களாலும் போதிக்கப்பட்டதை ஒதுக்கிவிட்டு(கூடுமானவரை), கிறிஸ்துவுக்கும் கற்பனைக்குமுள்ள உறவை வேதவசனம் தானே விளக்க அனுமதிக்கவேண்டும் என்று தீர்மானித்தேன்.

இதைச் செய்யும்படியாக, **"இயேசுவின் மரணம் கற்பனையை அழித்துவிட்டதா?"** என்கிற கேள்விக்குப் பதிலைத் தேடுவதற்குத் தீர்மானித்தேன்.

"இயேசுவின் மரணம் கற்பனையை அழித்துவிட்டதா?"

முறைமைகளுக்கடுத்தபிரமாணம், நியாயப்பிரமாணம் இவை இரண்டிற்குமிடையே வேதாகமம் ஒரு **வேறுபாட்டை** நியமித்திருக்கிறது என்பதை அறிந்துகொண்டதால், என் கேள்வியின் ஒரு பகுதிக்கு பதிலைப் பெற்றுவிட்டேன் என்பது உடனே எனக்குத் தெளிவாகிற்று.

முறைமைகளுக்கடுத்தபிரமாணம், வெவ்வேறு பலிகளையும் அவைகளோடு தொடர்புடைய பண்டிகைகளையும் குறித்த முறைமைகளை உள்ளடக்கியிருக்கிறது. உலகத்தின் பாவங்களுக்காக தேவ ஆட்டுக்குட்டி மரிப்பதை நோக்கிப்பார்க்க வேண்டியதின் அவசியத்தை அது இஸ்ரவேலரின் மனதில் பதித்தது.

மறுபக்கம், தேவனோடும் மனிதனோடும் தளராத உறவு வைத்துக்கொள்வது எப்படி என்பதைக் காண்பிக்கும்பொருட்டு, தேவனால் மனிதனுக்கு கொடுக்கப்பட்டது-**நியாயப்பிரமாணம்**.

பத்துக்கற்பனைகளை உள்ளடக்கியதுதான் இந்த நியாயப் பிரமாணம். இந்தப் பிரமாணம் யாத்திராகமம் 20-ல் எழுதப்படுவதற்கு வெகுகாலத்திற்கு முன்பாகவே மனிதனுக்குக் கொடுக்கப்பட்டது.

ஆதாமும் ஏவாளும் உண்டாக்கப்பட்டதிலிருந்தே, ஆதியில் இருந்தே (முதலாம் அத்தியாயத்தில் குறிப்பிட்டபடி)...

* ஒன்றான மெய் தேவனுக்கு முன்பாக வேறு தேவனை வைத்திருப்பதும்,
* விக்கிரகங்களை உண்டாக்குவதும்,
* தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்குவதும்,
* ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினையாமலிருப்பதும்,
* தகப்பனையும் தாயையும் கனம்பண்ணாமலிருப்பதும்,
* கொலை செய்வதும்,
* விபசாரம் செய்வதும்,
* களவு செய்வதும்,
* பொய்ச்சாட்சி சொல்வதும்,
* இச்சிப்பதும்-சன்மார்க்கத்திற்கு எதிரான தவறுகளாயிருந்தன.

பத்துக்கற்பனைகள் யூதர்களுடைய சட்ட அமைப்பின் ஒரு பகுதியல்ல, மாறாக, சிருஷ்டிப்பின் நாட்களிலேயே ஏற்படுத்தப் பட்டது என்பது இந்தக் கேள்விக்குப் பதில் காண்பதில், எனக்கு ஒரு பெரிய திறவுகோலாக இருந்தது.

"*நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து...*"- (கொலோ. 2:14) என்ற வசனத்தை சில வாரங்களாக நான் தியானித்தேன்.

இந்த தியானத்தின் வாயிலாக **இரண்டு உறுதியான முடிவுகளைப்** பெற்றேன்.

* **சில காரியங்கள் சிலுவையில் ஆணியடிக்கப்பட்டிருக்கிறது.**
* **சில காரியங்கள் சிலுவையில் ஆணியடிக்கப்படவில்லை.**

பாவத்தைக்குறித்து வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதை மனதில் கொண்டு, அநேக கேள்விகளை எழுப்பி, அவைகளுக்கு பதில் கண்டுபிடித்து, சிலுவையில் சில காரியங்கள் ஆணியடிக்கப்படவில்லை என்ற முடிவுக்கு வந்தேன். இயேசுவின் சிலுவை மரணத்திற்குப்பின்னர், ஒன்றான மெய் தேவனுக்கு முன்பாக வேறு தேவனை வைத்திருப்பதும், விக்கிரகங்களை உண்டாக்குவதும், தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்குவதும், தகப்பனையும் தாயையும் கனம்பண்ணாமலிருப்பதும், கொலை செய்வதும், விபசாரம் செய்வதும், களவு செய்வதும், பொய்ச்சாட்சி சொல்வதும், இச்சிப்பதும் சரியானவைகளாக மாறிவிடுமா?

இக்கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் மிக உறுதியான பதில் **"இல்லை"** என்பதே. பத்துக்கற்பனையின் இந்த ஒன்பது பகுதிகளும் சிலுவையில் **ஆணியடிக்கப்பட்டு ஒழிக்கப்படவில்லை**யெனில், **அவைகளோடு சேர்ந்து நான்காம் கற்பனையும் கைக்கொள்ளப்படத்தான்வேண்டும் என்பது வேதாகமத்தின் அடிப்படையில் தெளிவான கட்டளையாகிறது**.

இயேசுவின் மரணம் பத்துக்கற்பனைகளை ஒழிக்கவில்லை யெனில், எந்தப் பிரமாணம் சிலுவையில் ஆணியடிக்கப்பட்டது?

முறைமைகளுக்கடுத்த பிரமாணமே. பவுலார் சொன்னதுபோல, "***கட்டளைகளால் விரோதமாயிருந்த கையெழுத்தே***"-(கொலோ. 2:14). முறைமைகளுக்கடுத்தப் பிரமாணம், உண்மையாகவே ஒரு உபாத்தியைப்போல, ஆட்டுக்குட்டியாகிய இயேசுவின் உன்னதமான பலியை பார்த்திருக்கும்படி மனுகுலத்தை நடத்தியது. ஆனால் நியாயப்பிரமாணமோ, பூரணமான சிருஷ்டிப்பின் வேலைகளையும், மனிதனுடைய நன்மைக்காகவே அனைத்தும் உண்டாக்கப்பட்டன என்பதையும் சுட்டிக்காட்டுகிறது.

இயேசு ஏன் இந்த உலகத்தில் வந்தார்? விழுந்துபோன மனிதனை அன்பான பிதாவோடு ஒப்புரவாக்கவே. அவர் தன்னை பலியாக ஒப்புக்கொடுத்தபோது, எந்த பிரமாணத்தை நிறைவேற்றி முடிவுக்குக் கொண்டுவந்தார்? **முறைமைகளுக்கடுத்த பிரமாணத்தையே.**

"***சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து,*** *இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி...*"-(எபே. 2:15) என்று பவுல் சொன்னதுபோல, இயேசுவின் மரணம் பத்துக்கற்பனைகளை ஒழிக்கவில்லை. மாறாக, முறைமைகளுக்கடுத்தப் பிரமாணத்தையே ஒழித்தது. இதை நான் கண்டபோது, ஏன் என் பேராசிரியர்கள் இதைக் காணவில்லை என்று அதிசயப்பட்டேன். நான் செய்தது போலவே, அவர்களும் போதிக்கப்பட்டதையே ஏற்றுக்கொண்டு, அதையே போதிக்கிறார்கள் என்ற முடிவுக்கு வந்தேன்.

கற்பனைகளோடு கிறிஸ்துவுக்கிருந்த உறவை நான்கு சுவிசேஷங்களிலும் படித்தபோது, கிறிஸ்துவின் பிறப்போ, ஊழியமோ, மரணமோ, அல்லது பரமேறுதலோ, இக்காலத்திலே பத்துக்கற்பனைகளை கைக்கொள்ளுபவர்களுக்கு வரும் ஆசீர்வாதங்களை நீக்கிவிட்டதுபோன்ற எதையுமே நான் காணவில்லை. மாறாக, **மனிதனை மீட்கவும், தேவனுடைய பத்துக்கற்பனைகளுக்கு விசுவாசத்தினால் கீழ்ப்படியும்படி அவனை ஆவியினால் நிரப்பவும் பெலப்படுத்தவுமே இயேசு இந்த உலகத்தில் வந்தார்** என்பது மிக மிக வெளிப்படையாகத் தெரிந்தது.

சுவிசேஷத்தில் எங்குமே, பத்துக்கற்பனைகளை இயேசு கடிந்துகொண்டதாகவோ அல்லது மாற்றினதாகவோ இல்லை. மாறாக, தொடர்ந்து தேவனுடைய நியாயப்பிரமாணத்தை அவர் நிலைநிறுத்துவதையே காண்கிறோம். ஏழாம்நாள் ஓய்வுநாள் இந்த பிரமாணத்தின் ஒரு பகுதியாகும்.

கிறிஸ்துவின் மனப்பாங்கு நியாயப்பிரமாணத்தை உறுதிப் படுத்துவதைக் கண்டதோடு, சிருஷ்டிகருக்கும் மீட்பருக்கும் உரிய சன்மார்க்கக் கடமைகளுக்கு விசுவாசத்தினால் தங்களை ஒப்புவிப்போருக்கு, தேவன் வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை- அப்போஸ்தலர்களும் கண்டுகொண்டதாகச் சுட்டிக்காட்டும் அநேக வசனங்களையும் கண்டுபிடித்தேன்.

ரோமர் 2:13–"*நியாயப்பிரமாணத்தைக் கேட்கிறவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல, நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுவார்கள்.*"

ரோமர் 3:31–"*அப்படியானால், விசுவாசத்தினாலே நியாயப் பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல; நியாயப் பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே.*"

ரோமர் 7:12–"*ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்த முள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது.*"

ரோமர் 8:4–"*மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.*"

முறைமைகளுக்கடுத்த பிரமாணம், நியாயப்பிரமாணம் இவை இரண்டும் கிறிஸ்துவோடு கொண்டுள்ள உறவின் விளக்கத்தை எபி. 10–ல் கண்டபோது அதிசயப்பட்டேன்.

முதலாவது: முறைமைகளுக்கடுத்த பிரமாணத்தைக் குறித்தது: (எபிரெயர் 10:4–8).

"*அல்லாமலும், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே. ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது: பலியையும் காணிக்கை*

*யையும் **நீர் விரும்பவில்லை,** ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்; சர்வாங்க தகனபலிகளும், பாவநிவாரண பலிகளும் உமக்குப் பிரியமானதல்ல என்றீர். அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார். நியாயப்பிரமாணத்தின்படி செலுத்தப்பட்டு வருகிற பலிகளைக்குறித்து மேற்சொல்லியபடி: பலியையும், காணிக்கையையும், சர்வாங்க தகனபலிகளையும், பாவநிவாரண பலிகளையும் நீர் விரும்பவில்லை, அவைகள் உமக்குப் பிரியமானதல்ல."*

இந்தப் பகுதி முறைமைகளுக்கடுத்த பிரமாணத்தைக் குறித்தது. ஏனெனில் பத்துக்கற்பனைகளில் பலியையும் காணிக்கை யையும் குறிப்பிடும் எதுவுமேயில்லை. பாவத்திற்கான ஒரே பலியாக மரித்து, முறைமைகளுக்கடுத்த பிரமாணத்தை **நீக்குவதே** கிறிஸ்துவுக்கும் அந்தப் பிரமாணத்திற்குமுள்ள உறவு.

இரண்டாவது: நியாயப்பிரமாணத்தைக் குறித்தது: (எபிரெயர் 10:16,17).

"அந்த நாட்களுக்குப்பின் நான் அவர்களோடே பண்ணும் உடன்படிக்கையாவது: நான் என்னுடைய பிரமாணங்களை அவர்க ளுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறாரென்பதை உரைத்த பின்பு, அவர்களுடைய பாவங்களையும் அவர்களுடைய அக்கிரமங்களையும் நான் இனி நினைப்பதில்லை என்பதைச் சொல்லுகிறார்."

இந்த பகுதி பத்துக்கற்பனைகளை உள்ளடக்கிய நியாயப் பிரமாணத்தைக் குறித்தது என்று நிதானித்தேன். ஏனெனில் பலி களிலும் காணிக்கைகளிலும் அவருக்கு இனி பிரியமில்லையெனில், அவைகளை ஏன் மனதில் எழுதி முக்கியப்படுத்தவேண்டும்?

கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை **நீக்காமல்,** புது உடன்படிக் கையின் ஒருபகுதியாக அதை நிலைநிறுத்துவாரென்று வேதாகமம் போதிக்கிறது. ஒரு மனிதன் விசுவாசத்தினால் கிறிஸ்துவின் பலியை ஏற்றுக்கொள்ளும்போது, தமது பரிசுத்த ஆவியானவர் மூலமாக

தமது பத்துக்கற்பனைகளை அவன் மனதிலும் எண்ணத்திலும் எழுத தேவன் வாஞ்சிக்கிறார். விசுவாசியால் நன்மைக்கும் தீமைக்குமிடையே பகுத்தறிய முடிகிறது. இவ்வாறு கீழ்ப்படிந்து வாழும் வாழ்க்கையின் வழியாக, பாவத்தையும் அக்கிரமத்தையும் எதிர்க்க மனிதன் பலப்படுத்தப்படுகிறான்.

சுருக்கமாக, கிறிஸ்துவுக்கும் நியாயப்பிரமாணத்துக்கும் உள்ள உறவைக்குறித்து நான் கற்றுக்கொண்டதெல்லாம்: "*கர்த்தர் தமது நீதியினிமித்தம் அவன்மேல் பிரியம் வைத்திருந்தார்;* ***அவர் வேதத்தை முக்கியப்படுத்தி அதை மகிமையுள்ளதாக்குவார்***" -(ஏசா. 42:21) என்பதே. (வேதம் என்பது ஆங்கிலத்தில் கற்பனை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது).

நிச்சயமாக,, நீக்கப்படப்போகிற பலிகளும் காணிக்கைகளு மடங்கிய முறைமைகளுக்கடுத்த பிரமாணத்தை இது குறிப்பிடாது என்ற முடிவுக்கு வந்தேன். சடங்குகளாகிய பலிகளையும் காணிக்கை களையும் அழிக்கவும், சிருஷ்டிப்பில் தாம் ஏற்படுத்தின பத்துக் கற்பனைகள் அடங்கிய நியாயப்பிரமாணத்தை தமது வாழ்க்கை யாலும் மரணத்தாலும் வாழ்ந்து காண்பித்து, உறுதிப்படுத்தி (முக்கி யப்படுத்தி) மேன்மைப்படுத்தவுமே இயேசு வந்தார்.

நியாயப்பிரமாணத்துடன் கிறிஸ்துவுக்கிருந்த உறவு என்ன? அதை கிறிஸ்துதாமே தமது அதிகாரத்தொனியில்-"*நியாயப் பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும்* ***அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளா தேயுங்கள்;*** *அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்*"-(மத்தேயு 5:17,18) என்று விளக்கினார். இயேசு சொன்னதை கொலோசெயர் 2:14-ல் பவுலார் மறுத்துப் பேசுகிறாரா? எனக்குப் போதிக்கப்பட்டபடியும், நான் மற்றவர்களுக்கு போதித்தபடியும் பவுலின் இந்த வார்த்தைகளை நாம் ஏற்றுக்கொள்வோமானால் (தவறாகப் புரிந்துகொள்வோமானால்), அது நிச்சயமாக முரண்பாடாகவே இருக்கும்.

ஆண்டவருடைய நாளைக் குறித்த என் படிப்பின் இந்த கட்டத்தில், எனக்குச் சற்று கோபம் வந்தது–கோபம் மற்றவர்களால் எனக்குப் போதிக்கப்பட்டதைக்குறித்தும், நான் மற்றவர்களுக்குப் போதித்ததைக் குறித்துமே. **"ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்"** –(மத்தேயு 5:19) என்ற வசனத்தின் உயிருள்ள சாட்சியாக நான் இருந்தேன்.

தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் ஒரு பகுதியை மீறி நடப்பது தவறல்ல என்று போதிக்கப்பட்டிருந்தேன். மேலும் பத்துக்கற்பனைகளில் ஒன்றான **"ஏழாம்நாளாகிய ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக"**–(ஆதி. 2:2,3; யாத். 20:8) என்கிற கற்பனையை மீறும்படி மற்றவர்களுக்கும் போதித்து வந்தேன்.

முறைமைகளுக்கடுத்த பிரமாணத்துக்கும் நியாயப் பிரமாணத்துக்கும் இடையே இருக்கிற வித்தியாசத்தை வேறுபடுத்தி, கிறிஸ்து அவைகளோடு கொண்டிருக்கிற உறவை படிக்க இவ்வளவு நேரம் செலவு செய்வது எனக்கு ஏன் இத்தனை முக்கியமாயிருந்தது? பதில் மிக எளிமையானதே. இயேசுதான் பூரணமான முன்மாதிரி. பரலோகப் பிதாவுடன் பூரணமான உறவுகொள்ள நம்மை நடத்தவும் அவரே தகுதியுள்ளவர். ஆனால் இதை மனதில் அறிந்திருப்பது மாத்திரம் போதாது. உலகத்தின் பழக்கமாகவோ அல்லது கிறிஸ்தவ சபைகளின் பழக்கமாகவோ இல்லாமலிருந்தாலும்கூட, அவர் கடைபிடித்ததை நானும் கடைபிடிக்கவேண்டும் என்ற தீர்மானம் எடுக்குமளவிற்கு அது நம் இருதயத்தை பலமாக உந்தவும் வேண்டும்.

யோவான் இதை "அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், **அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்"**–(1 யோவான் 2:6) என்று சொன்னார். **இப்படி நடப்பது,** "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளுகிறவர்களா னால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம்.

அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை. அவருடைய வசனத்தைக் கைக் கொள்ளுகிறவனிடத்தில் தேவஅன்பு மெய்யாகப் பூரணப்பட்டி ருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்"-(3-5) என்ற வசனத்தின்படி, **அவரது கற்பனைகளைக் கைக்கொள்ளுவதுடன் இணைக்கப்பட்டிருக்கிறது.**

கர்த்தருடைய நாளைக் குறித்த என் படிப்பு இயேசுவுக்கு நெருங்கிய நண்பனாகும்படி என்னை அதிகமாகத் தூண்டியது. ஓய்வுநாள் கர்த்தருடைய நாள்- ஆதலால் இயேசு அதைப் பரிசுத்தமாக ஆசரித்தார் என்பதை உணர்ந்த என் சிந்தையிலும் உள்ளத்திலும் ஏழாம்நாள் ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரிக்கவேண்டும் என்ற வாஞ்சை பிறந்தது. அந்த நாள் அவருக்குச் சொந்தமானது-பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் இதில் ஒத்துப்போகின்றன என்பதில் நான் நம்பிக்கையாயிருந்தேன். அது என் மனதில் ஒரு பெரிய நம்பிக்கையின் செய்தியாகத் தொனித்துக்கொண்டிருந்தது.

கர்த்தருடைய நாள் சனிக்கிழமைதான், ஏழாம்நாளாகிய ஓய்வுநாள் ஞாயிற்றுக்கிழமை அல்ல என்பதைக்குறித்த-என்னை நடத்திச்சென்ற பகுதிகளை நான் பகிர்ந்துகொள்ளவேண்டும்.

வெளி. 1:10:"*கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காளசத்தம்போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன்.*" இந்த வசனத்தின் தொடர்ச்சியில் அது ஞாயிற்றுக்கிழமையா அல்லது சனிக்கிழமையா என்று எதுவும் சொல்லப்படாதபடியால், நமது பாரம்பரியமல்ல வேதாகமம் மட்டுமே அதற்கு விளக்கம் கொடுக்க நாம் அனுமதிக்க வேண்டும். **வேதாகமத்தின் மிகத்தேர்ந்த விளக்கவுரை வேதாகமம்தான்**!

கர்த்தருடைய நாளைக்குறித்தும், ஏழாம்நாளாகிய ஓய்வுநாளை இயேசு உறுதிப்படுத்தினாரா இல்லையா என்பதைக் குறித்தும் நாம் ஆராய்ந்துகொண்டிருக்கிறபடியால், அவரையே அவருக்காகப் பேச அனுமதிப்பது முறையாக இருக்கும். **மத். 12:8**-ல் இயேசு:"***மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்** என்றார்.*" எனவே, ஓய்வுநாள்

இயேசுவின் அதிகாரத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது.

யாத். 20:8-11: *"ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக;* ***ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்..."*** - இந்த வசனங்கள் தேவனுடைய நாள் எது? முதல் நாளான ஞாயிற்றுக்கிழமையா அல்லது ஏழாம்நாளான சனிக்கிழமையா என்பதில் மேலும் அதிகப்படியான வெளிச்சத்தைத் தருகின்றன. **எனவே, ஏழாம்நாள்தான் கர்த்தருடைய ஓய்வுநாள் அல்லது கர்த்தருடைய நாள் என்பது வெளிப்படையான உண்மை.**

அநேக வருடங்களாக நான்காம் கற்பனை யூதர்களுக்கு மட்டும்தான் என்று நான் போதிக்கப்பட்டும், மற்றவர்களுக்கு போதித்தும் வந்தேன். இப்போது வேறுவிதமாகக் கற்றுக்கொண்டேன். ஆதியாகமம் 2-ல் சிருஷ்டிப்பின்போது (யூத இனம் தோன்றுவதற்கும் வெகு காலத்திற்கு முன்பாகவே) தேவன் தமது அதிகாரத்தை மனிதனுக்கு அறிவித்தார். ஏழாம்நாளை ஓய்வுநாள் என்று தெரிந்து கொண்டு, அதை ஆசீர்வதித்து, பரிசுத்தப்படுத்தி, மேன்மைப் படுத்தினார். அதற்குப்பின் வருடங்கள் நெடுகிலும் மனிதன் **ஏழாம்நாள் ஓய்வுநாளைக்** கைக்கொண்டிருக்கவேண்டும் அல்லது அதன் புனிதத்தைக் குலைத்திருக்கவேண்டும். எப்படியிருந்தாலும், **சிருஷ்டிப்பின் வாரத்திலிருந்தே அது கர்த்தருடைய நாளாக நிலைத்திருந்திருக்கிறது.**

"இவ்விதமாக வானமும் பூமியும், அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தன. தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்"-ஆதி. 2:1-3.

தேவனுடைய நாளிலே அவருக்குத் தரவேண்டிய பயபக்தியை குறித்து, தேவன் ஏழாம்நாள் ஓய்வுநாளை எவ்வாறு கருதுகிறார்

என்பதிலிருந்து எழுதும்படி ஏசாயா ஆவியானவரால் ஏவப்பட்டார். தேவன்: ***"என் பரிசுத்தநாளாகிய...கர்த்தருடைய பரிசுத்த நாளை"***-(ஏசாயா 58:13) என்றார்.

மீண்டும், நான் எப்படி இயேசுவுடனேயே வாதாட முடியும்? மாற்கு 2:27,28-ல் *"பின்பு அவர்களை நோக்கி: மனுஷன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது; ஆகையால்* ***மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்*** *என்றார்."*

சனிக்கிழமைதான் தேவனுடைய ஓய்வுநாள் என்கிற சத்தியம் எனக்குமுன்பாகத் துளிர்த்து-வளர்ந்து-பெரிதாகிக்கொண்டே வந்தது. எல்லாவற்றையும் உண்டாக்குவதில் இயேசு ஈடுபட்டிருந்தபடியாலும், *"இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்"*-(எபிரெயர் 13:8) என்பதாலும், தமது சிருஷ்டிப்பைக்குறித்து அவர் மாத்திரமே மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்பதாலும், தாம் தெரிந்துகொண்ட ஓய்வுநாளை அவர் மாற்றினார் என்று வேதாகமத்தில் சொல்லப்பட்டிராத படியாலும், அவர் நேற்றும் இன்றும் என்றும் ஏழாம்நாள் ஓய்வுநாளுக்கு ஆண்டவராகவே இருக்கிறார்.

சனிக்கிழமைதான் ஏழாம்நாளாகிய ஓய்வுநாள் என்பதை கிறிஸ்து தமது வார்த்தையால் மாத்திரமல்ல, தமது செய்கையாலும் உறுதிப்படுத்தினார் என்பதை (மற்ற புத்தகங்களோ, என் குடும்பமோ, பேராசிரியர்களோ, போதகர்களோ சொல்வதால் அல்ல) வேதாகமத்தின் அடிப்படையில் நான் நம்ப ஆரம்பித்தேன்.

தமது ஞானமுழுக்கைத் தொடர்ந்த வனாந்திர சோதனைக்குப் பிறகு, இயேசு எங்கும் சுற்றித்திரிந்து மக்களுக்குப் போதித்தார். "தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து, ***தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெபஆலயத்திலே பிரவேசித்து***, *வாசிக்க எழுந்து நின்றார்"*-(லூக்கா 4:16) என்கிறது வேதாகமம்.

இப்படியாக, சனிக்கிழமை, ஏழாம்நாள் ஓய்வுநாள், அவரது பிதாவுடன் அவர் கொண்ட உறவின் ஒரு பகுதியாக, நாசரேத்தில் அவர் வளர்ந்த, ஆயத்தப்பட்ட காலத்திலெல்லாம் அவரால்

ஆசரிக்கப்பட்டது. இப்போது அவர் தமது வெளியரங்கமான ஊழியத்தை ஆரம்பிக்கிறார். இப்போதும், அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றுவது சீஷர்களுடைய பாக்கியம் என்பதையும் அவர்களது கடமை என்பதையும் போதிக்கும்படியாக, ஓய்வுநாளை தொடர்ந்து ஆசரித்து வாழ்ந்துகாட்டினார்.

கிறிஸ்துவின் வாழ்க்கையில் வந்த ஓய்வுநாட்களுக்கு லூக்கா அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். இதை அவரது பெயர் கொண்ட சுவிசேஷத்தில் **20 முறைக்கும் மேலாக "ஓய்வுநாள்" என்று குறிப்பிட்டுள்ளதால் தெளிவாக அறிகிறோம்.**

மிகவும் கவனமாகத் தேடி ஆராய்ந்து பார்த்தும், இயேசு ஏழாம்நாளை மாற்றியதாகவோ அல்லது அழித்துப் போட்டதாகவோ குறிப்பிடுகிற ஒரு வசனத்தைக்கூட என்னால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடிக்க முடியவில்லை.

பழைய ஏற்பாட்டின் ஓய்வுநாள் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவால் உறுதிப்படுத்தப்பட்டதா? என்கிற முதலாம் கேள்வியை ஆராய்ந்த பின்பு, சனிக்கிழமையான ஏழாம்நாள் ஓய்வு இயேசுவுக்கு நல்லதாக இருந்திருக்குமென்றால், கிறிஸ்தவன் என்ற பெயருக்கேற்ப வாழவிரும்புகிற எவருக்கும் அது நல்லதாகவே இருக்கும் என்கிற முடிவிற்கு வரவேண்டியதாயிற்று. உண்மையான கிறிஸ்தவனாயிருப்பதென்பது, கிறிஸ்துவைப் போன்றே இருக்க வாஞ்சிப்பதுதான். கிறிஸ்துவைப்போல இருப்பதென்பது, அவரது உதாரணத்தைப் பின்பற்றுவதுதான். கிறிஸ்துவின் உதாரணம், ஏழாம்நாள் ஓய்வுநாளையும், **சனிக்கிழமையையும், ஏழாம்நாள் ஓய்வுநாள்தான் கர்த்தருடைய நாள்** என்பதையும் உறுதிப்படுத்துகிறது என்கிற முடிவிற்கு வரவேண்டியதாயிற்று.

நான் ஏன் "ஓய்வுநாளை ஆசரிக்கும்" கிறிஸ்தவனாக இருக்கிறேன்?

காரணம் 3:

ஏனெனில் அது அப்போஸ்தலர்களால் கைக்கொள்ளப்பட்டது

சுவிசேஷங்களில் எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து ஏழாம்நாள் ஓய்வை உறுதிப்படுத்தினார் என்பதால் ஆச்சரியப்பட்ட நான், என்னுடைய இரண்டாவது கேள்வியைக்குறித்தும் ஆராயவேண்டியதாயிற்று.

கேள்வி 2:

பழைய ஏற்பாட்டின் ஓய்வுநாள் அப்போஸ்தலர்களால் கடைபிடிக்கப்பட்டதா?

வேதாகமத்திலிருந்து பதில் பெறவேண்டியது அவசியம், ஏனெனில் **முதல் கேள்விக்கு** நான் கண்டுகொண்ட பதில்களை என் நண்பர்களுடனும் குடும்பத்தாருடனும் பகிர்ந்துகொண்டால், "டேன், கிறிஸ்து ஏழாம்நாள் ஓய்வுநாளை தமது போதனையாலும் பழக்கத்தாலும் உறுதிப்படுத்தினார் என்கிறதை ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால், அவர் பஸ்காவையும் யூதர்களுடைய மற்ற விசேஷங்களையும் என்ன மனப்பாங்கில் கைக்கொண்டாரோ அப்படித்தான் இதையும் செய்தார். அது சிலுவையோடு முடிந்து விடும் என்பதும், அவருடைய சீஷர்கள் வாரத்தின் முதல் நாளை கிறிஸ்தவர்களுடைய புதிய ஓய்வுநாளாக ஆசரிப்பார்கள் என்பதும் அவருக்குத் தெரியும்" என்று சொல்லுவார்கள்.

சில போதனைகள், இயேசு வாழ்ந்த காலத்துக்கு மாத்திரமே ஒத்துப்போகும் என்றும், பின்னர் சபை ஸ்தாபிக்கப்பட்டபோது, இந்தக் காரியங்கள் அவசியமற்றதாகிவிட்டன என்றும், இவை சபையை கட்டியிருக்கவில்லை என்றும், நூற்றாண்டுகள் நெடுகிலும்

போதித்தவர்கள் இருப்பதால், கிறிஸ்துவின் பின்னடியார்களே தெளிவாகப் பேசினால் அது பயனுள்ளதாயிருக்கும் என்று எனக்குத் தோன்றியது. மீண்டும் மீண்டும் தேவையற்றது என்று பட்டியலிடப்படும் ஒரு பகுதி - சனிக்கிழமையான ஏழாம்நாள் ஓய்வுநாள் ஆசரிப்பு மட்டுமேயாகும்.

என்றாலும், **சீஷர்கள் முழு சுவிசேஷச் செய்தியையும் சில வாரங்களிலோ அல்லது வருடங்களிலோ மறந்துவிடுவதற்காகவா கிறிஸ்து தமது வார்த்தையாலும் மாதிரியாலும் அவர்களைப் பயிற்றுவிக்க தமது நேரம் முழுவதையும் செலவழித்தார்?** என்கிற கேள்வியைக் கேட்டு, அதற்கான பதிலைக் கண்டபோது, அந்த விளக்கம் அதிகமதிகமாக ஒவ்வாததாகத் தோன்றியது.

அவரது பின்னடியார்கள் மற்றவர்களை சீஷர்களாக்க வேண்டுமென்பதே கிறிஸ்துவின் வாஞ்சை என்பது படிக்கப்படிக்க எனக்குத் தெள்ளத்தெளிவாகத் தெரிந்தது. "*நான் உங்களுக்குக் கட்டளையிட்ட* ***யாவையும்*** *அவர்கள்* ***கைக்கொள்ளும்படி*** *அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்*"- (மத்தேயு 28:19,20). நாம் ஏற்கெனவே கண்டுபிடித்ததுபோல, ஏழாம்நாள் ஓய்வுநாளை கர்த்தருடைய நாளாக ஆசரிக்கவேண்டாம் என்று இயேசு அவரது சீஷர்களுக்குச் சொன்னதாக சுவிஷேங்களில் எந்த ஒரு இடத்திலும் நாம் காண்பதில்லை.

கடைசிகால சபையான லவோதிக்கேயா சபை தேவனுடைய தெளிவான வார்த்தைகளுக்குப் பதிலாக பாரம்பரியங்களை முக்கிய படுத்தும் என்பதும்கூட, அதை வெதுவெதுப்பானதென்று இயேசு விவரிக்க ஒரு காரணம். மனிதன் மாற்றி அமைத்ததையா அல்லது இயேசு அமைத்ததையா எதைப் பின்பற்றவேண்டுமென்பதை நாம் தீர்மானிக்கவேண்டும். இயேசுவைப் பின்பற்றும்போது நம் குடும்பத்திலும் நண்பர்களிடமும் பிரபலமாக முடியாமலிருக்கலாம். "*அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்:* ***மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது***"-(அப். 5:29) என்ற பேதுருவின் வார்த்தைகளையும், "*இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்?* ***மனுஷரையா***

பிரியப்படுத்தப்பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே”–(கலாத்தியர் 1:10) என்ற பவுலின் வார்த்தைகளையும் தொடர்ந்து நினைவில் வைத்திருக்கவேண்டும்.

அப்போதைய என் ஊழியக் காலத்தில், முதல் நூற்றாண்டு கால சபையின் வளர்ச்சியைக்குறித்துப் படித்துக்கொண்டிருந்தேன். அவர்கள் இயேசுவின் அடிச்சுவடுகளில் நடந்தார்களா அல்லது ஏழாம்நாள் ஓய்வுநாளைப்பற்றிய வேறொரு பாதையில் நடந்தார்களா என்பதைக் காண அவர்களைப் பின்தொடருவது நலமென்று எனக்குத் தோன்றியது.

அதைத் தொடங்கச் சரியான இடம் அவர்களது தலைவர் இயேசு கிறிஸ்துவின் மரணம்தான். நான் ஞாயிற்றுக்கிழமையை ஆசரித்த கிறிஸ்தவனாக இருந்தபோது, ஏன் ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவர்களின் ஓய்வுநாளாகக் கருதப்படுகிறது என்ற கேள்வி கேட்கப்பட்ட போதெல்லாம், இயேசு ஞாயிற்றுக்கிழமைதான் உயிர்த்தெழுந்தார், புதிய உடன்படிக்கையை விசுவாசித்த சீஷர்கள் அப்போதிருந்து ஞாயிற்றுக்கிழமையில்தான் சபையாகக் கூடினார்கள் என்று சொல்லியிருக்கிறேன். சுவிசேஷங்களைப் படிக்கும்போது, சிலுவை மரணத்திற்குப் பின்பு நடந்ததை ஒரு நிழற்படம்போல லூக்கா 23:50 முதல் 24:1 வரையுள்ள வசனங்களில் காணலாம்:

“யோசேப்பு என்னும் பேர்கொண்ட ஒரு ஆலோசனைக்காரன் இருந்தான்; அவன் உத்தமனும் நீதிமானுமாயிருந்தான். அவன் யூதருடைய பட்டணங்களிலொன்றாகிய அரிமத்தியாவிலிருந்து வந்தவனும், தேவனுடைய ராஜ்யத்துக்குக் காத்திருந்தவனும், யூதர்களுடைய ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியாதவனுமாயிருந்தான். அவன் பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டு, அதை இறக்கி, மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டப்பட்டதுமாய் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்படாததுமாயிருந்த ஒரு கல்லறையிலே வைத்தான். அந்த நாள் ஆயத்தநாளாயிருந்தது; ஓய்வுநாளும் ஆரம்பமாயிற்று. கலிலேயாவிலிருந்து அவருடனேகூட வந்திருந்த ஸ்திரீகளும் பின்சென்று, கல்லறையையும் அவருடைய சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும்

பார்த்து, திரும்பிப்போய், கந்தவர்க்கங்களையும் பரிமளதைலங்களையும் ஆயத்தம்பண்ணி, ***கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்.*** *வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம்பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக்கொண்டு வேறு சில ஸ்திரீகளோடுங்கூடக் கல்லறையினிடத்தில் வந்தார்கள்."*

இந்தப் பகுதியில் அநேக முக்கியமான உண்மைகள் வெளிப்படையாகவே தெரிகின்றன.

முதலாவது,

வெள்ளிக்கிழமையில் ஆயத்தம்

1. இயேசு சிலுவையிலறையப்பட்டு மரித்தபின்னர், ஓய்வுநாள் துவங்குமுன்னதாகவே, அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பின் கல்லறையில் வைக்கப்பட்டார்–(23:50–53).
2. சூரிய அஸ்தமனத்தில் துவங்கும் ஓய்வுநாளுக்காக ஆயத்தப்படும் நேரமாக வெள்ளிக்கிழமை குறிக்கப்பட்டிருந்தது–(23:54; லேவி. 23:32 – "*சாயங்காலம் துவக்கி, மறுநாள் சாயங்காலம் மட்டும் உங்கள் ஓய்வை ஆசரிக்கக்கடவீர்கள்*").
3. இயேசுவின் சரீரம் எங்கே வைக்கப்பட்டதென்பதைக் கவனித்த பின்பு, வீட்டிற்குச் சென்று அவரது சரீரத்தை கனப்படுத்துவதற்கான கந்தவர்க்கங்களையும் பரிமளதைலங்களையும் ஸ்திரீகள் ஆயத்தம்பண்ணினார்கள்–(23:55,56).

இரண்டாவது,

ஓய்வுநாளில் (சனிக்கிழமையில்) ஓய்வு

1. அந்த ஸ்திரீகள் "***கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்***"–(23:56). இது நியாயப்பிரமாணத்தினுடைய நான்காம் கற்பனையாகிய "*ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக*"– (யாத். 20:8) என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. இந்த நேரத்தில், சிலுவை மரணம் முடிந்துபோன

சம்பவமாயிருந்தது. ஆனாலும் அவர்கள் புது ஓய்வுநாளைக் குறித்த எந்தவிதமான எதிர்பார்ப்பையும் வெளிக்காட்டவில்லை. மாறாக, ஆராதனையின் முக்கியப்பகுதியாயிருந்த நான்காம் கற்பனைக்குக் கீழ்ப்படிகிறார்கள். ஏன்? காரணம்... அவர்கள் இயேசுவின் மாதிரியையே பின்பற்றினார்கள். அவர் தாமே தமது வார்த்தையாலும் வாழ்க்கையாலும் ஏழாம் நாளை ஓய்வுநாளாக உறுதிப்படுத்தியிருந்தார்.

2. இயேசு ஓய்வுநாளில் கல்லறையில் **ஓய்ந்திருந்தார்**. ஆதி. 1:31-2:3வரை: "*அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று. இவ்விதமாக வானமும் பூமியும், அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டுத் **தீர்ந்தன.** தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி, தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். தேவன் தாம் சிருஷ்டித்து உண்டு பண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர் வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்*"-என்று வாசிக்கிறோம்.

ஆதி. 2:1-ல் இருக்கிற ஆறாம்நாள் சிருஷ்டிப்பின் முடிவு வார்த்தையைக் கவனித்தீர்களா?-"***தீர்ந்தன***". ஆறாம் நாளிலே தேவன் சிருஷ்டிப்பை முடித்தார். பின்னர் **ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்து, அதை ஆசீர்வதித்து, பரிசுத்தமாக்கினார்.** இவ்வாறாக, படைப்பின் முழுமையையும் பரிபூரணத்தையும் குறிக்கும் **ஒப்புதல் கையொப்பமாக ஓய்வுநாளை நியமித்தார்.**

ஆதியாகமத்தில் இருக்கும் இந்த வார்த்தைகளும், யோவான் 19:28-30-ல் கூறப்பட்டுள்ள "*அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக: தாகமாயிருக்கிறேன் என்றார். காடி நிறைந்த பாத்திரம் அங்கே வைக்கப்பட்டிருந்தது; அவர்கள் கடற்காளானைக் காடியிலே தோய்த்து, ஈசோப்புத்தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக்கொடுத்தார்கள். இயேசு காடியை வாங்கினபின்பு, **முடிந்தது** என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை*

ஒப்புக்கொடுத்தார்" என்ற வசனங்களும், என் அறிவோடும் உணர்வுகளோடும் மெய்யாகவே பேசின.

மனிதன் புது சிருஷ்டியாக மாற என்ன தேவை என்பதை வெளிப்படுத்த வசனம் 30–ல் உபயோகிக்கப்பட்டிருக்கும் "**முடிந்தது**" என்ற வார்த்தையைக் கவனித்தீர்களா? இயேசு தமது ஊழியத்தை திரும்பிப் பார்த்து, தமது பிதாவின் சித்தத்தை முடித்தார் என்ற நிச்சயத்தைப் பெற்றார். அது மிக நன்றாக இருந்தது! மனிதனை சிருஷ்டிகரோடு இணைக்கத் தேவையான அனைத்தும் சரியாகச் செய்துமுடிக்கப்பட்டது. எனவே, ஆண்டவர் "***எல்லாம் முடிந்தது***" என்று சொன்னார். இதற்காகவே அவர் தாகமாயிருந்தார். **சிருஷ்டிப்பை** முடித்தபின் ஓய்ந்திருந்தது போலவே, **புது சிருஷ்டிப்பிற்கு** வழியைத் திறந்த பிறகும் ஓய்ந்திருந்தார்.

மரணத்தில்கூட இயேசு ஏழாம்நாள் ஓய்வுநாளை மீறவில்லை என்பதை நான் புரிந்துகொண்டபோது, அது எனக்கு மனக் கிளர்ச்சியை ஏற்படுத்துகிற பேராச்சரியமாக இருந்தது. ஏன்? **ஏனெனில், கல்லறையில் அவர் எடுத்த ஓய்வு, மீட்கப்படப்போகிறவர்களுக்கு மிக முக்கியமானது.** மீட்பின்திட்டம் பரிபூரணமானதும் முழுமையானதுமாயிருந்தது. சிருஷ்டிகராகவும் மீட்பராகவும் கனத்தைப் பெற்றுக்கொள்ள தேவன் வகுத்த வழியின் முக்கியமான பகுதி ஓய்வுநாள் என்பதற்கு, கிறிஸ்துவின் கல்லறை ஓய்வு மறுக்கமுடியாத ஒரு ஆதாரமாயிருக்கிறது.

மூன்றாவது,
ஞாயிற்றுக்கிழமையின் செய்கைகள்

1. ஓய்வுநாளிலே ஒருபோதும் **செய்யக்கூடாததை–செய்யும்படி** அதாவது, இயேசுவின் சரீரத்திற்கு தைலமிடும்படி...(24:1) ஸ்திரீகள் ஞாயிற்றுகிழமையில் கல்லறைக்குப் போனார்கள். ஏன்? ஏனெனில், ஞாயிற்றுக்கிழமை வாரத்தின் முதல்நாள் என்பதையும், அந்நாளில் இப்படிப்பட்ட வேலைகளைச் **செய்யலாம்** என்பதையும் அந்தநாள்வரை உணர்ந்திருந்தார்கள். ஏனெனில், வாரத்தின் ஏழாம்நாள் ஓய்வுநாள் என்பதையும், அந்நாளிலே இப்படிப்பட்ட வேலைகளைச் **செய்யக்கூடாது** என்பதையும் அந்தநாள்வரை உணர்ந்திருந்தார்கள்.

2. அந்தச்சமயத்தில்தான் சீஷர்கள் உயிர்த்தெழுதலின் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையில் என்னசெய்தார்கள் என்பதைப் பார்க்க கவனம் செலுத்தினேன். அதைக் கவனிப்பது எனக்கு மிகவும் முக்கியம். ஏனென்றால், சீஷர்கள் ஞாயிற்றுக்கிழமையில் சபை கூடிவந்ததை, ஞாயிற்றுக்கிழமை புது ஓய்வுநாள் என்பதற்கு ஆதாரமாக அநேகர் சுட்டிக்காட்டுகிறார்கள். (நானும்கூட இவ்வாறாகவே அநேக வருடங்களாகப் போதித்திருக்கிறேன்). நான் ஆராய்ந்த சில கேள்விகளை இங்கே எழுதுகிறேன்:

கேள்வி 1: அது விசுவாசத்தினால் மகிழ்வோடு கொண்டாடக் கூடின கூட்டமா? வேதாகமம் சுருக்கமான ஒரு பதிலைத் தருகிறது.

யோவான் 20:19: "*வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில்,* ***யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில்,*** *இயேசு வந்து அவர்கள் நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்.*"

மாற்கு 16:14: "*அதன்பின்பு பதினொருவரும் போஜனபந்தியிலிருக்கையில் அவர்களுக்கு அவர் தரிசனமாகி, உயிர்த்தெழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற்போனதினிமித்தம்* ***அவர்களுடைய அவிசுவாசத்தைக்குறித்தும் இருதய கடினத்தைக்குறித்தும் அவர்களைக் கடிந்துகொண்டார்.***"

சீஷர்களின் மனப்பாங்கைப் படித்தபிறகு, ஆர்வத்தைத் தூண்டக்கூடிய சில உண்மைகள் தெளிவாயின:

1. அவர்கள் மகிழ்ச்சியினால் கூடவில்லை; மாறாக, "*யூதர்களுக்கு பயந்ததினால்...*" -(யோவான் 20:19) கூடியிருந்தார்கள்.

2. அங்கே கொண்டாட்டமில்லை; மாறாக, அவர்கள் கதவுகளின் பின்னே ஒளிந்துகொண்டிருந்தார்கள். தங்களைப் பாதுகாக்கும்படியாக அடைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் மனப்பாங்கு என்னவாக இருந்ததென்பது தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

3. அவர்கள் விசுவாசத்தினால் ஆராதனை செய்துகொண்டிருக்கவில்லை; மாறாக, "*அவிசுவாசத்துடனும், கடின இருதயத்தோடும்...*" இருந்தார்கள்.

4. அவர்களுடைய மனப்பாங்கு இயேசுவால் பாராட்டப்படவில்லை. மாறாக, அவர்களுடைய அவிசுவாசத்திற்காக அது கடிந்து கொள்ளப்பட்டது.

எனவே, இயேசுவாகிலும் அவரது சீஷர்களாகிலும் ஞாயிற்றுக் கிழமையை ஓய்வுநாளாகப் பார்க்கவில்லை என்பது மேற்சொல்லிய குறிப்புகளால் முடிவாகிறது. இயேசு, சிலுவை மரணத்திற்குச் சில நாட்களுக்கு முன்பாக: *"தாம் எருசலேமுக்குப்போய், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் பல பாடுகள்பட்டு, கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்"*-(மத். 16:21) என்ற வசனங்களுடன் இணைத்துப் பார்க்கும்போது, மேலும் அதிகத் தீர்க்கமாகத் தெரிகிறது.

ஏழாம்நாள் ஓய்வுநாளை ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றும் இப்படிப்பட்ட முக்கியமான சம்பவம் நடந்திருக்குமானால், அந்த மாற்றத்தை, அதைக்குறித்த வெளிப்படையான அறிவுரைகளை **நிச்சயமாக** இயேசு கொடுத்திருப்பார். புதிய ஓய்வுநாளின் செய்கைகளை சீஷர்களும் காண்பித்திருப்பார்கள். **ஆனால் அப்படி எதுவுமே நடக்கவில்லை.**

கேள்வி 2: எத்தனை முறை சீஷர்கள் சபைகூடிவந்தார்கள்?

இயேசு ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும்தான் சீஷர்களைச் சந்தித்தார் என்று நிரூபிக்க முடிந்தால், அப்போது, ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பு சட்டப்படி முறையானதென்று ஒப்புக்கொள்ளலாம் என்று நான் காரணம் சொல்லலாம். ஆனால் மறுபக்கத்தில், அவர்களை அடிக்கடி சந்தித்தார் என்பதையும், இயேசு பரமேறின பின்பு சீடர்கள் ஞாயிற்றுக்கிழமை அல்லாத மற்ற நாட்களிலும் கூடினார்கள் என்பதையும் நிரூபிக்க முடிந்தால், கிறிஸ்து உண்மையாகவே ஞாயிறு ஆசரிப்பை நியமிக்கவில்லை என்பதைத் தெளிவாக அறியலாம்.

வேத வசனங்களின் நடுவிலிருந்து சில வார்த்தைகளை எடுத்துப் பேசுவது சிறந்ததல்ல என்று நான் நம்புகிறபடியால், பாரம்பரியமல்ல வேதாகமமே முழுமையாகப் பேசட்டும் என்று அனுமதித்தேன்.

துவக்கமாக, உயிர்த்தெழுந்த பிறகு 40 நாட்களுக்குப் பின்பு-பரமேறுவதற்கு முன்பாக, இயேசு தமது பின்னடியார்களைச் சந்தித்து கொடுத்த அறிவுரைகளைக் கவனிப்போம்.

"தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்குப் பரிசுத்தஆவியினாலே கட்டளையிட்டபின்பு, அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள்வரைக்கும் ***செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங்குறித்து****, முதலாம் பிரபந்தத்தை உண்டுபண்ணினேன். அவர் பாடுபட்ட பின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். அன்றியும், அவர் அவர்களுடனே கூடிவந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்"*- **அப். 1:1-4.**

1. தாம் எடுத்துக்கொள்ளப்படும்வரைக்கும் தாம் செய்தவைகள், போதித்தவைகளின் வாயிலாக இயேசு கற்பித்தார்-(வச.1).

2. பரிசுத்த ஆவியானவரின் வழியாக அப்போஸ்தலர்களுக்கு குறிப்பான கட்டளைகளைக் கொடுத்தார்-(வச. 2). ஆனால் எங்குமே நான்காம் கற்பனையான ஏழாம்நாள் ஓய்வுநாளின் பரிசுத்தத்தை வார்த்தையினாலாவது வாழ்க்கையினாலாவது ஞாயிறு ஆசரிப்புக்குத் தாம் மாற்றிவிட்டதாக அவர் கட்டளை கொடுத்ததுபோன்று எந்தச் செய்தியையும் நாம் படிக்கிறதில்லை.

3. "*தெளிவான திருஷ்டாந்தங்களினாலே*" இயேசு தம்மை கிறிஸ்துவாக அப்போஸ்தலருக்குக் காண்பித்திருந்தார்-(வச.3). அவைகளெல்லாம் அவரது குணமான பரிசுத்த அன்போடு, தேவனுடைய கற்பனைகளுக்குக்கீழ்ப்படிய உதவுகிற அன்போடு கொடுக்கப்பட்டது. (யோவான் 14:15:- *நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்*).

4. நாற்பது நாட்களாக அவர்களுக்கு அவர் காணப்பட்டார்-(வச.3), **ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டுமல்ல**! ஏனெனில்,

கொடுக்கும்படி அவரிடம் அதிகமிருந்தது. ஆனால் கொஞ்ச நாட்களுக்குள் கொடுக்கவேண்டியிருந்தது. எனவே, ஒரு நாளைக் கூட அவர் தவறவிட்டிருக்கமாட்டார். தனி நபர்களையும் வெவ் வேறு கூட்டங்களையும் ஒவ்வொரு நாளும் சந்தித்திருப்பாரென்பது சரியானதாகத் தெரிகிறது.

அடுத்ததாக, அவர் பரமேறினபின்பு எத்தனை முறை அவரது பின்னடியார்கள் சபைகூடினார்கள் என்பதையும் கவனிப்போம்.

தங்களது தலைவர் பரமேறினதைக் கண்டபின்பு, "*அவர்கள் அவரைப் பணிந்துகொண்டு, மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பிவந்து,* ***நாடோறும்*** *தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருந்தார்கள்*"-**(லூக். 24:52,53)**; மேலும் "*அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே* ***அநுதினமும்*** *தரித்திருந்து...*"-**(அப். நட. 2:46)** என்று குறிப்பிடுகிறார் லூக்கா. உயிர்த்தெழுந்த நாளில் சபை கூடினார்கள் என்கிற அடிப்படையில், "ஞாயிறு ஆசரிப்பு" கொள்கையானது கொண்டுவரப்பட்டிருந்தால், **அவர்கள் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்தார்கள் என்கிற அமிலச்சோதனையின் முன்பாக**(acid test) அது தோல்வியையே தழுவும்.

அப்போஸ்தலர் நடபடிகள், கி.பி.31-ல் கிறிஸ்து பரமேறினதி லிருந்து ஏறக்குறைய கி.பி. 62-வரைக்குமான சபை சரித்திரத்தை கொண்டிருப்பதால், கிறிஸ்தவத்தின் துவக்க வருடங்களில், ஏழாம் நாளான சனிக்கிழமை ஓய்வுநாளை ஆசரிப்பது உட்பட அனைத்திலும் சீஷர்கள் இயேசுவின் அடிச்சுவடுகளில் தொடர்ந்து நடந்ததைப் பார்த்தது எனக்கு ஆர்வமளித்தது. ஆதிகாலக் கிறிஸ்தவர்களின் மனப்பாங்கை நாம் சற்று நிறுத்தி நிதானமாகக் கவனிப்போம்.

முதல் நிறுத்தம், அப். 13:14:"*அவர்கள் பெர்கேபட்டணத்தை விட்டுப் புறப்பட்டு, பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவுக்கு வந்து, ஓய்வுநாளிலே ஜெபஆலயத்தில் பிரவேசித்து, உட்கார்ந்தார்கள்.*" இந்தச் சம்பவம் ஏறக்குறைய **கி.பி.45-ல் கிறிஸ்து பரமேறி 14 வருடங்கள் கழிந்து நடந்தது.**

பேசும்படியாக பவுலார் அழைக்கப்பட்டபோது, வல்லமையான சுவிசேஷச் செய்தியைக் கொடுத்தார். அது இயேசு கிறிஸ்துவின் கிருபையைப்பற்றியதாக இருந்தது. தனது குறிப்புகளை முடித்தபின்பு "*அவர்கள் யூதருடைய ஜெபஆலயத்திலிருந்து புறப்படுகையில், அடுத்த ஓய்வுநாளிலே இந்த வசனங்களைத் தங்களுக்குச் சொல்லவேண்டும் என்று புறஜாதியார் வேண்டிக்கொண்டார்கள்*" -(அப். 13:42) என்கிறது வேதாகமம். கிறிஸ்தவ ஓய்வுநாளாக எந்த நாளை ஆதிகால சபை அங்கிகரித்திருந்தது என்பதைக்குறித்த விஷயத்தில் இங்கேதான் நமது **முதல் நிறுத்தம்** ஆர்வத்தைத் தூண்டுகிறது. இதுவரை, பவுலார் யூதர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறார். எனவேதான் ஏழாம்நாள் ஓய்வுநாளைத் தெரிந்துகொண்டு, அதிலே போதித்தார் என்று ஒருவர் கூறலாம். ஆனால் இப்போது புறஜாதி மக்களும் பவுலை அணுகி, அதே நம்பிக்கையின் போதகத்தை, தங்களுக்கும் அடுத்த ஓய்வுநாளிலே தரும்படியாக அழைக்கிறார்கள்.

பவுலார் ஞாயிற்றுக்கிழமையை கிறிஸ்தவ ஓய்வுநாளாக ஆசரித்திருந்தால், கிருபையின் சத்தியத்தைக் கேட்க விரும்பிய யூதர்களல்லாத அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, "யூதர்களுடைய ஓய்வுநாளை பரிசுத்த நாளாக கிறிஸ்தவர்கள் அங்கிகரிக்கவில்லை- மாறாக, அவர் உயிர்த்தெழுந்த நாளான ஞாயிற்றுக்கிழமையில் கிறிஸ்துவை கனம்பண்ணும்படி கூடலாம்"- என்று கூறியிருக்கலாம். அதுவும் அடுத்த நாளேகூட துவக்கியிருக் கலாம். ஒரு வாரம் முடியும்வரை காத்திருக்கவேண்டிய அவசியம் இருந்திருக்காது. அது அவருக்குச் சரியான சமயமாகவும் இருந்தி ருக்கும். ஆனால் என்ன நடந்தது?

அப். 13:44,48: "*அடுத்த ஓய்வுநாளிலே கொஞ்சங் குறையப் பட்டணத்தாரனைவரும் தேவவசனத்தைக் கேட்கும்படி கூடிவந்தார்கள்... புறஜாதியார் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்*" என்று சொல்லுகிறது.

இந்த **முதல் நிறுத்தத்திலிருந்து** நாம் என்ன முடிவிற்கு வரவேண்டும்? பவுல் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து,

தேவனுடைய வார்த்தையை கைக்கொள்ளும்படிக்கு, யூதருக்கும் புறஜாதிகளுக்கும் போதித்தார்; இவ்வாறாக, **உயிர்த்தெழுதலுக்குப் பிறகு 14 வருடங்கள் கடந்தும்,** அவர்கள் ஏழாம்நாள் ஓய்வுநாள் உட்பட அனைத்திற்கும் கீழ்ப்படிந்தார்கள் என்ற முடிவிற்கே!

இரண்டாம் நிறுத்தம், அப்போஸ்தலர் 15. இந்த அதிகாரத்தில் **உயிர்த்தெழுதல் நடந்து 20 வருடங்கள் கடந்த பிறகு கி.பி.51-ல்,** எருசலேமில் நடந்த ஆலோசனைக்கூட்டத்தைக் குறித்த சரித்திரம் இருக்கிறது.

பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் பேதுரு, பவுல், பர்னபா மூலமாக வளர்ந்தபோது, புறஜாதிகள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். சில மனிதர்கள், புறஜாதிகள் மனந்திரும்பி விருத்தசேதனம்பண்ணிக்கொண்டால் மட்டுமே கிறிஸ்தவ சமுதாயத்திற்குள் சேரமுடியும் என்று போதிக்க ஆரம்பித்தனர். பிரிவினை வரும்படியான சூழ்நிலை ஏற்பட்டதால், குறிப்பாக இந்த பிரச்சனையைக்குறித்து கூடிவிவாதிக்க வேண்டும் என தீர்மானம் எடுக்கப்பட்டது. விவாதத்திற்குப் பின்னர், மனந்திரும்பிய புறஜாதிகளின் இருதயங்கள் விசுவாசத்தினாலே சுத்தமாகியிருந்தபடியால், அக்கூட்டத்தின் நிர்வாகியான யாக்கோபு,

"ஆதலால் புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப்பண்ணலாகாதென்றும், விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருங்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும், விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுதவேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன். மோசேயின் ஆகமங்கள் ஓய்வுநாள்தோறும் ஜெபஆலயங்களில் வாசிக்கப்பட்டு வருகிறபடியால், பூர்வகாலந்தொடங்கிச் சகல பட்டணங்களிலும் அந்த ஆகமங்களைப் பிரசங்கிக்கிறவர்களும் உண்டே"- என்பதாக அறிவுறுத்தினார்-(அப். நட. 15:19-21).

இந்த **இரண்டாம் நிறுத்தத்திலிருந்து** நாம் என்ன முடிவிற்கு வரவேண்டும்? யூதருக்கும் புறஜாதிகளுக்குமிடையே தடுப்புச் சுவரை எழுப்பக்கூடியதாக இருந்த பெரிய பிரச்சனைகளை தவிர்ப்பதற்காகவே இந்தக் கூட்டம் ஆலோசித்தது. எனவே, சனிக்கிழமையையா - அல்லது ஞாயிற்றுக்கிழமையையா - எதை

கிறிஸ்தவ ஓய்வுநாளாக ஆசரிப்பது என்ற பிரச்சனையே அங்கு வரவில்லை. ஏன்? ஏனெனில், அது அவர்களுக்கு ஒரு பிரச்சனையாகவே இல்லை. மேலும், யூதர்களும் புறஜாதி கிறிஸ்தவர்களும், **உயிர்த்தெழுதலுக்கு 20 வருடங்களுக்குப் பின்பும்,** ஏழாம்நாள் ஓய்வுநாளைப் பொறுத்தமட்டில், இயேசுவின் அடிச்சுவடுகளையே பின்பற்றினார்கள் என்ற முடிவிற்கே!

மேலும் வசனம் 21-ஐ மீண்டும் பாருங்கள். "*மோசேயின் ஆகமங்கள்* ***ஓய்வுநாள்தோறும்*** *ஜெபஆலயங்களில் வாசிக்கப்பட்டு வருகிறபடியால், பூர்வகாலந்தொடங்கிச் சகல பட்டணங்களிலும் அந்த ஆகமங்களைப் பிரசங்கிக்கிறவர்களும் உண்டே என்றான்.*" ஓய்வுநாள் அவர்களது பழக்கமாக இருந்திருக்கவில்லையெனில், ஏன் யாக்கோபு ஓய்வுநாளைப்பற்றிக் குறிப்பிடுகிறார்? என்று என்னை நானே கேட்டுக்கொண்டதையும் நினைத்துப் பார்க்கிறேன்.

மூன்றாம் நிறுத்தம், அப். 16:13. "*ஓய்வுநாளில் நாங்கள் பட்டணத்துக்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து, அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தோம்*".. இந்தச் சம்பவம் **உயிர்த்தெழுதலுக்குப் பிறகு 22 வருடங்கள் கழித்து,** ஏறக்குறைய கி.பி.53-ல் நடந்தது.

பிலிப்பி பட்டணத்தில் பவுலாரும் அவரது நண்பர்களும் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஏழாம்நாள் ஓய்வுநாளை ஆசரிக்காதிருந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்று சில சமயங் களில் நான் ஆச்சரியப்பட்டதுண்டு. ஆனால் ஆண்டவரை அவரது நாளிலே நினைவுகூர்ந்ததால் என்ன நடந்தது என்பதைப் பாருங்கள். லீதியாள் அவரது செய்தியை கவனித்ததுமட்டுமல்ல, தனது குடும் பத்தோடு சேர்ந்து ஞானமுழுக்கும் எடுத்துக்கொண்டாள். மேலும் அந்த பயணிகள் தங்கி ஊழியத்தைச் செய்யும்படியான இடத்தையும் கொடுத்தாள். அவர்கள் ஊழியமும் செய்தார்கள். "*யூதர்களாகிய இந்த மனுஷர் நம்முடைய பட்டணத்தில் கலகம்பண்ணி...*"- (அப். 16:20) என்று அவர்களை குற்றப்படுத்தினதால், அதிகாரிகள் அவர்களைச் சிறைச்சாலையில் போடுமளவுக்கு அவர்கள் வைராக்கியமாக ஊழியம் செய்தார்கள். அப்போஸ்தலர்கள்

ஆண்டவருக்கு அவருடைய நாளைக்குறித்து உண்மையாயிருந்த படியால், சிறை அதிகாரிக்கு சாட்சிசொல்லி, அவருடைய குடும்பத்துக்கே ஞானமுழுக்கு கொடுக்கும்படியான இடத்துக்கு அவர்கள் நடத்தப்பட்டார்கள். *"தன் வீட்டார் அனைவரோடுங்கூட தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்"*- (அப். 16:33,34) என்று வாசிக்கிறோம்.

அந்த பிலிப்பி பட்டணத்திலே, முதல் ஓய்வுநாளிலிருந்தே வல்லமையான ஒரு சபை எழும்பிற்று. அதைக்குறித்து பவுலார், *"நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்"*-(பிலி. 1:6) என்று எழுதினார்.

இந்த **மூன்றாம் நிறுத்தத்திலிருந்து** நாம் என்ன முடிவிற்கு வரவேண்டும்? **உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, 22 வருடங்கள் கழித்தும்**, அவருடைய பின்னடியார்கள் ஏழாம்நாள் ஓய்வுநாளைக் குறித்த அவரது முன் உதாரணத்தின்படியே நடந்து கொண்டிருந்தார்கள் -என்ற முடிவிற்குத்தான் வரவேண்டும்.

நான்காம் நிறுத்தம், அப். 17:1,2. *"அவர்கள் அம்பிபோலி பட்டணத்தையும் அப்பொலோனியா பட்டணத்தையும் கடந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்கு வந்தார்கள்; அங்கே யூதருக்கு ஒரு ஜெப ஆலயம் இருந்தது. பவுல் தன் வழக்கத்தின்படியே அவர்களிடத்தில் போய், மூன்று ஓய்வுநாட்களில் வேதவாக்கியங் களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்து..."*

உயிர்த்தெழுதலுக்குப் பிறகு 22 வருடங்கள் கழித்து ஏறக்குறைய கி.பி.53-ல், ஏழாம்நாள் ஓய்வுநாளை ஆசரிப்பது உட்பட அனைத்திலும் பவுலார் இயேசுவைப் பின்தொடர்ந்தார். ஆண்டவருடைய வீட்டிலே அவரது நாளிலே பிரவேசித்து, சுவிசேஷ செய்தியைக் கேட்க விரும்பின அனைவரோடும் அதைப் பகிர்ந்துகொள்வது அப்போஸ்தலருடைய வழக்கமாயிருந்தது.

ஏழாம்நாள் ஓய்வை பவுலார் ஆசரித்தார் என்பதை அழுத் தமாகக்கூற மற்றொரு நிறுத்தத்தையும் சேர்த்துக்கொள்வோம்.

ஐந்தாம் நிறுத்தம், அப். 18:4,11. *" ஓய்வுநாள்தோறும் அவன் ஜெபஆலயத்திலே சம்பாஷணைபண்ணி, யூதருக்கும் கிரேக்கருக்கும் புத்திசொன்னான்... அவன் ஒரு வருஷமும் ஆறு*

மாதமும் அங்கே தங்கி, தேவவசனத்தை அவர்களுக்குள்ளே உபதேசம்பண்ணிக்கொண்டுவந்தான்"- இந்தச் சம்பவம் **உயிர்த்தெழுதலுக்குப் பிறகு 23 வருடங்கள் கழித்து** ஏறக்குறைய கி.பி.54-ல் நடந்தது.

பதினெட்டு மாதங்களாக ஒவ்வொரு ஓய்வுநாளிலும் தேவனை ஆராதிக்கவும், யூதர்களுக்கும் கிரேக்கருக்கும் போதிக்கவும் கூடுவது பவுலாரின் வழக்கமாயிருந்தது. இந்த இடத்திலே ஒரு சிறிய கணக்கு போட்டுப்பார்ப்பது மிகவும் ஆச்சரியமாயிருக்கும். 18 மாதங்களை 4-க்கொண்டு பெருக்கினால், குறைந்தது **72 தொடர்ச்சியான ஓய்வுநாட்கள்** வரும். இந்த **72 வாரங்களாக பவுல் தனது ஆண்டவரின் அடிச்சுவடையே பின்தொடர்ந்தார்.**

இந்த நிறுத்தங்களிலிருந்து நான் என்ன முடிவைப் பெற்றுக் கொள்ளுகிறேன்? சபையின் சரித்திரமாக இருக்கிற இந்த அப்போஸ் தலர் புத்தகம், இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதலுக்குப் பின்பு, அப்போஸ்தலர்கள் எந்த நாளை கிறிஸ்தவ ஓய்வுநாளாக ஆசரித்தார்கள் என்பதைப்பற்றின சந்தேகத்திற்கு இடமே வைக்கவில்லை. **அது சனிக்கிழமையான, கர்த்தருடைய நாளான, ஏழாம்நாள் ஓய்வுநாளையே** என்ற முடிவைப்பெற்றுக்கொள்ளுகிறேன்..

1பேதுரு 2:21-ல் *"கிறிஸ்து நீங்கள்* ***தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி*** *உங்களுக்கு* ***மாதிரியைப் பின்வைத்துப் போனார்"*** என்கிறார் பேதுரு. 1தெச. 4:1-ல் *"அன்றியும், சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று, நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக்கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக்கொண்டு புத்திசொல்லுகிறோம்"* என்கிறார் பவுல்.

இயேசு மகிமையுள்ள சபைக்காக சீக்கிரமாக வரவிருக்கிறார். பழைய ஏற்பாட்டில் பரிசுத்தரான ஏனோக்கை மறுரூபமடைய நடத்திய அதே மனஉறுதியைக்கொண்டவர்கள்தாம் அந்த நாளிலே உயிரோடிருக்கும் மிதமானவர்களின் எண்ணிக்கையை நிரப்புவார்கள். *"ஏனோக்கு தேவனோடே* ***சஞ்சரித்துக் கொண்டிருந்தார் (நடந்துகொண்டிருந்தார்)"***-(ஆதி. 5:24).

கர்த்தருடைய நாள் எது என்கிற முக்கியமான வேத சத்தியத்தைக்குறித்த தவறான எண்ணத்தோடு பல வருடங்களிருந்தேன் என்பதை ஒப்புக்கொள்வது கடினமாகவேயிருந்தது. இதைக்குறித்து வேதாகமம் சொல்லுகிறதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று நானும் என் மனைவியும் தீர்மானம் எடுத்தபோது, எங்களுடைய குடும்பத்தில் பலரும், நண்பரில் சிலரும் எங்கள் தீர்மானத்தைக்குறித்து கடினமாகப் பேசினார்கள். ஆனால் அப்போஸ்தலர்கள் கற்றுக்கொண்டு நினைவுகூர்ந்ததுபோலவே, **நாம் திருப்திப்படுத்தவேண்டிய நபர் இயேசு ஒருவரே** என்பதை நாங்களும் அதிகமதிகமாக கற்றுக்கொள்ளுகிறோம்-நினைவுபடுத்தப்படுகிறோம்.

அப்போஸ்தலர்கள் வாழ்க்கையில் ஏழாம்நாள் ஓய்வு அவர்களுக்குப் புத்துணர்ச்சி அளித்த முக்கியமான சத்தியமாயிருந்தது. தேவனை ஆராதித்து அவரோடு தொடர்புகொள்ள ஒரு முழுநாள்; தங்களது கவலைகளையெல்லாம் மகா பிரதான ஆசாரியராயிருக்கிற இயேசுவின் கைகளில் வைக்கும்படியான நாள்; தேவனுடைய கிருபையில் திளைக்க, அவரது ஓய்வு கொடுக்கும் அனுபவத்தை அடைய ஒரு நாள்; அடுத்த வாரத்தின் வாய்ப்புகளையும் தடங்கல்களையும் சந்திக்கத் தேவையான பலத்தால் நிரப்பப்படும் ஒரு பூரணமான நாளாக இருந்தது.

நான் ஏன் "ஓய்வுநாளை ஆசரிக்கும்" கிறிஸ்தவனாக இருக்கிறேன்?

* இயேசுவை நேசிக்கும் ஒரு கிறிஸ்தவனாக அவரைப் பின்பற்றி, அவரது அடிச்சுவடுகளில் நடந்து, அவரைப் பிரியப்படுத்த விரும்புகிறேன். எனவே, நான் ஓய்வுநாளை ஆசரிக்கும் கிறிஸ்தவனாக இருக்கிறேன்.

* *"நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்"*-(யோவான் 14:15) என்று இயேசுகிறிஸ்து சொன்னார். அவர் என்னை நேசிக்கிறார் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால் அப்போஸ்தலர்களின் வாழ்க்கையைப் பின்பற்றி, ஏழாம் நாள் ஓய்வுநாளை ஆசரிப்பதின் வழியாக, இயேசுவோடு அன்பான உறவு வைத்திருப்பதற்கு

ஏதுவாக, போதுமான அளவு நான் அவரை நேசிக்கிறேன் என்பதை உலகத்துக்கு நிரூபிக்கவிரும்புகிறேன். எனவே, நான் ஓய்வுநாளை ஆசரிக்கும் கிறிஸ்தவனாக இருக்கிறேன்.

* ஓய்வுநாளை ஆசரிப்பது அப்போஸ்தலர்களுக்குப் போதுமான அளவு நன்மையாக இருந்திருக்குமென்றால், எனக்கும் அது போதுமான அளவு நன்மையாக இருக்கும் என்று நம்புகிறேன். (மிக எளிமையாகச் சொல்வதெனில்). எனவே, நான் ஓய்வு நாளை ஆசரிக்கும் கிறிஸ்தவனாக இருக்கிறேன்.

"ஞாயிற்றுக்கிழமையை" ஆசரித்த கிறிஸ்தவ சபையில் வளர்ந்து வந்த வாலிபனாக இருந்தபோது, அந்த ஞாயிறு பள்ளியில்(Sunday School) நாங்கள் இவ்வாறு ஒரு சிறிய பாடலைப் பாடுவோம். அந்தப் படலின் கருத்து இதுதான்:

அன்றைய சத்தியம்
அன்றைய சத்தியம்
அன்றைய சத்தியம்
எனக்குத் தாருமே!

பவுலுக்கும் சீலாவுக்கும்
பவுலுக்கும் சீலாவுக்கும்
போதுமானதாயிருந்தது
எனக்கும் போதுமே

அன்றைய சத்தியம்
அன்றைய சத்தியம்
அன்றைய சத்தியம்
எனக்குத் தாருமே!

நான் ஏன் "ஓய்வுநாளை ஆசரிக்கும்" கிறிஸ்தவனாக இருக்கிறேன்?

காரணம் 4:

ஏனெனில் அது ஆதிகால சபையால் கைக்கொள்ளப்பட்டது

வேதாகமத்தின் கடைசி புத்தகமாகிய வெளிப்படுத்தல், முதல் நூற்றாண்டு முடியும் தருவாயில் எழுதப்பட்டபடியால், ஏழாம்நாள் ஓய்வுநாள் அப்போஸ்தலர்களுடைய மரணத்திற்குப் பின்பு கைக்கொள்ளப்பட்டதா என்கிற தகவலைப் பெற, நாம் சரித்திரத்தை அனுமதிக்க வேண்டும்.

என்றாலும், இந்தத் தகவலைப் பெறும் முன்பாக, அப்போஸ்தலருடைய மரணத்தில் என்ன நடந்தது என்பதைக் குறித்தும், அந்தக் காட்சி முடிந்த பின்பு என்ன நடக்கும் என்பதைக் குறித்தும் வெளிப்படுத்தல் புத்தகமானது முக்கியமான கருத்தாழமிக்க தகவல்களை நமக்குத் தருகிறது என்பதை நினைவுபடுத்திக் கொள்வது மிகவும் பயனுள்ளதாயிருக்கும்.

ஒன்று: வெளி. 1:10-ல் "*கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்*" என்று யோவான் எழுதுகிறார். நாம் முன்னர் படித்ததுபோல, ஏழாம்நாள் ஓய்வுநாள்தான் கர்த்தருடைய நாள் என்பதாக அப்போஸ்தலருடைய மனதிலும் எண்ணத்திலும் இருந்தது. "*ஆகையால் மனுஷகுமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்*"-(மாற்கு 2:28; மத். 12:8) என்று இயேசு சொன்னபோது, அவர் எதைக் குறிப்பிட்டார் என்பதை யோவான் மிகச்சரியாக அறிந்திருந்தார். எனவே, கி.பி. 95-100-ம் வருடங்களில் ஏழாம்நாள் ஓய்வுநாள் மதிப்புள்ளதாகவும், வழக்கத்திலிருந்த ஒன்றாகவும் அங்கிகரிக்கப்பட்டிருந்தது என்பதை அறியமுடிகிறது.

இரண்டு: முதலாம் நூற்றாண்டு முடிவுக்கு வந்தபோது, அப்போஸ்தலருடைய வாழ்க்கைத்தரமாயிருந்த இயேசுவின் அடிப்படைப் போதனைகளில் சில, அவைகளின் முக்கியத்துவத்தை இழந்துபோயிருந்தன; சில போதனைகள் மாறியே போயிருந்தன. ஏழு சபைகளுக்கு இயேசு கொடுக்கும் செய்தியில் குறிப்பிட்டிருந்தபடி (வெளி. 2,3) தவறான குணங்கள் எத்தனை சீக்கிரமாக கிறிஸ்தவ சபைகளைப் பாதித்துவிட்டன என்கிறதைக் காண்கிறோம்.

மூன்று: பத்துக்கற்பனைகள் அவருக்கு எவ்வளவு முக்கியமானது என்பதையும், அதே போன்றுதான் கிறிஸ்தவ சபைகளுக்கும் அது இருக்கவேண்டும் என்பதையும் இரண்டு வசனங்களில் யோவான் திரும்பவும் நினைவுபடுத்துகிறார்.

1. *"அப்பொழுது வலுசர்ப்பமானது (வலுசர்ப்பம் சாத்தானைக் குறிக்கிறது) ஸ்திரீயின்மேல் (ஸ்திரீ கிறிஸ்தவசபையைக் குறிக்கிறது) கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று"*- (வெளி. 12:17). **தேவனுடைய கற்பனை**-களோடு தொடர்புடைய இயேசு கிறிஸ்துவின் சாட்சி என்ன? எழுதப்பட்டிருக்கிற சரித்திரத்தின் படி அவர் கொடுத்த முதல்பிரசங்கத்தில்(சந்தேகத்திற்கிடமின்றி), இயேசு கிறிஸ்து சொன்னது: *"நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்து போனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும்மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்"*(மத்தேயு 5:17-19).

2. "தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்த வான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்"–(வெளி. 14:12). இதிலுள்ள "சாட்சி" எனும் வார்த்தை வேதாகமத்தில் வெவ்வேறு அர்த்தங்களில் உபயோகப்படுத்தப்படுகிறது. அதில் ஒன்று "கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசம்" –(அப். 24:24; கலா. 1:23) என்பதாகும். நாம் பார்த்தது போல, ஏழாம்நாள் ஓய்வுநாளும் இந்த "கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தின்" ஒரு பகுதியே. இது இயேசுவாலும் அவருடைய அப்போஸ்தலர் களாலும் கைக்கொள்ளப்பட்டுவந்தது.

நான்கு: வேதத்தை முடிக்கும் வார்த்தைகளை எழுதும்படி யோவான் தன் எழுதுகோலை மையினுள் முக்கியபோது, வெளிப் படுத்தின புத்தகத்தை மாத்திரமல்ல, **தேவனுடைய அத்தனை வார்த்தைகளையும்** குறித்த தேவனது உணர்வுகளை எழுத்துவடிவில் காக்கும்படி ஏவப்பட்டார். "*இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக* ***எச்சரிக்கிறதாவது:*** *ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப் பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப் போடுவார்*"–(வெளி. 22:18,19).

ஏன் இந்த நான்கு கொள்கைகளும் எனக்கு முக்கியமானவைகள்? ஏன் அவைகள் அனைத்து கிறிஸ்தவர் களுக்கும் முக்கியமானவைகளாக இருக்க வேண்டும்? ஏனெனில், இயேசு மரித்து, உயிர்த்து, பரலோகிற்கு ஏறிப்போனதிலிருந்தும், சபை பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவரால் பலப்படுத்தப்பட்ட அற்புதத்திலிருந்தும், (பின்னர் வந்த ஆண்டுகளில்) கிறிஸ்தவ சபையிலே காரியங்கள் மாறிப்போயிருந்தன.

ஆவியானவரால் ஏவப்பட்டு, சவிசேஷங்களிலும் கடிதங் களிலும் அப்போஸ்தலர்களால் எழுதப்பட்ட அநேக அடிப்படைக்

கொள்கைகள் மாறிப்போயின. அவர்கள் தங்களுடைய ஜீவனையும் பொருட்படுத்தாது கடைபிடித்த அநேக சத்தியங்கள் மாறிப்போயின. இந்த மாற்றங்கள் வர நூற்றுக்கணக்கான ஆண்டுகள் தேவைப்பட வில்லை. ஏறக்குறைய உடனடியாகவே வரத்துவங்கின.

"இது எப்படி நடந்திருக்கும்?" என்று என்னை நானே கேட்டுக் கொண்டது இன்றும் எனக்கு நினைவிலிருக்கிறது. வெளி.2-ம்,3-ம் அதிகாரங்களில் எழுதப்பட்டிருக்கிற ஏழு சபைகளுக்கான இயேசுவின் செய்திகளை நான் படித்தபோது, என் கேள்விக்கான பதிலைக் கண்டுபிடித்தேன். அது, **இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தில்** தங்களை வைத்திருக்க, **இயேசுவைக் குறித்த சாட்சிக்கு** அவர்கள் அனுமதி கொடாமல், மற்றவர்களுக்கும், சுயத்துக்கும் செவிகொடுத்தார்கள் என்று மிகத் தெளிவாகவும் இருந்தது.

ஏழு சபைகளுக்கான செய்திகள் ஒவ்வொன்றும் (வெளி. 2:7,11,17,29; 3:6,13,22) "*ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லு கிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்*" என்று **ஒரே விதமாக** முடிகின்றன. இந்தக் கோட்பாடு நம் படிப்பில் மிக முக்கியமான ஒன்று. ஏன்? நாம் விழிப்பாயிராவிட்டால், மற்றவர்களின் சத்தத்தை, பாரம்பரியத்தின் சத்தத்தை, சுய இச்சையின் சத்தத்தை "*ஆவியானவர் சொல்லுகிற*" என்கிற சத்தத்திற்குப் பதிலாகப் புகுத்திவிடுவோம்-(அப். 21:11).

தவறைக் கண்டுபிடிக்க மிக வல்லமையான வழி சத்தியத்தை அறிந்துகொள்வதுதான். தங்கள் வேதாகமத்தைப் படிக்கிற கிறிஸ்த வர்கள் மட்டுமே தவறுகளைக் கண்டுபிடிக்கத் தகுதி பெற்றவர்கள். ஏனெனில் பொய்களைக் கண்டுபிடிக்க உண்மையை அறிந்திருப்பது அவசியம். அப்போஸ்தலன் பவுலுடைய மிக விருப்பமான ***"வேத வாக்கியம் என்ன சொல்லுகிறது?"***-(ரோமர் 4:3; கலா. 4:30) என்கிற ஒரு கேள்வியை எப்போதும் நாம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

"மாற்றம் வேதத்திற்கு ஒத்து இருக்கிறதா" என்பது, யாரோ ஒருவர் சொல்வதின் அடிப்படையில் இருக்கக்கூடாது. "மாற்றம் வேதத்திற்கு ஒத்து இருக்கிறதா" என்பது, யாரோ ஒருவர் இணையதளத்தில் எழுதுவதின் அடிப்படையில் இருக்கக்கூடாது. "மாற்றம் வேதத்திற்கு ஒத்து இருக்கிறதா" என்பது, நானோ அல்லது நீங்களோ யோசிப்பதின் அடிப்படையிலும் இருக்கக்கூடாது.

"மாற்றம் வேதத்திற்கு ஒத்து இருக்கிறதா" என்பது, அதைக் குறித்து **"வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது"** என்பதின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

கிறிஸ்தவ சபைகளில் ஏற்பட்ட மாற்றங்களில் ஒன்று, சபை ஆராதனைக்காகக் கூடவேண்டிய நாளைக் குறித்ததாயிருந்தது.

* சிலர் அது ஞாயிற்றுக்கிழமை என்கிறார்கள்.
* சிலர் அது சனிக்கிழமை என்கிறார்கள்.
* சிலர் அது எந்த நாள் என்பது முக்கியமல்ல. ஏதாவது ஒரு நாளை ஆசரித்தால் போதும் என்கிறார்கள்.

இதைக்குறித்து பல புத்தகங்களும் எழுதப்பட்டிருக்கின்றன.

* சிலர் இந்த மாற்றம் இயேசுவால் வந்ததென எழுதியிருக்கிறார்கள்.
* சிலர் இந்த மாற்றம் அப்போஸ்தலரால் வந்தது என எழுதியிருக்கி றார்கள்.
* சிலர் இந்த மாற்றம் காண்ஸ்டன்டைன் என்ற சக்ரவர்த்தியால் வந்தது என்று எழுதியிருக்கிறார்கள்.
* சிலர் இந்த மாற்றம் ரோமன் கத்தோலிக்க சபையால் ஏற்படுத்தப்பட்டது என்று எழுதியிருக்கிறார்கள்.

இந்த புத்தகத்தை வாசிக்கிற சிலருடைய ஏமாற்றத்துக்கேதுவாக மேற்சொல்லிய எந்த கூட்டத்தாரோடும் சேர்ந்து பொதுவான வலையில் நான் அகப்படப்போவதில்லை. இந்தக் கட்டத்தில், இதை நான் நம்புவதுபோல் ஒருவர் நம்பாமலிருப்பது கிறிஸ்துவுடனான என் உறவுக்கோ அல்லது மற்ற கிறிஸ்தவர்களுடனான என் உறவுக்கோ நன்மை செய்யப்போவதில்லை. காண்ஸ்டன்டைன் அல்லது ரோமன் கத்தோலிக்க சபை இந்த மாற்றத்தில் ஈடுபட்டிருக்கிறது என்பதை நிரூபிக்கும் சான்றை என்னால் எளிதில் காண்பிக்கமுடியும்.

ஆனால், இயேசுவாவது, அப்போஸ்தலராவது இந்த மாற்றத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொண்டு, வேத வாக்கியங்களுக்கு உண்மையாயிருப்பதோ, வேதவாக்கியங்களோடு ஒத்துப்போவதோ என்னால் **முடியாது.**

சபையானது, சரீர ஆவிக்குரிய காதுகளை கூர்மையாக வைக்காமல், தேவனுடைய பரிசுத்த ஆவியானவருடைய சத்தத்துக்குச் செவிகொடுக்காமல், மற்றவர்களுக்கும் சுயத்துக்கும் செவிகொடுத்து, வேதவாக்கியங்களின் முக்கியத்துவத்தைக் குறைத்ததால், ஒரு வேளை (ஒருவேளை) சபைக்குள்ளாகவே இந்த மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

இந்த மாற்றத்தைக் குறித்து அதிகாரப்பூர்வமான சட்டம் கொண்டுவந்தால், இதை கைக்கொண்டுவருகிற கிறிஸ்தவர்களுக்கு பிரியமாயிருக்கும் என்று காண்ஸ்டன்டைன் சக்கரவர்த்தியோ, அல்லது ரோமப் பேரரசோ இம்மாற்றத்தை (ஒரு வேளை) உறுதிப்படுத்தியிருக்கலாம்.

இதைக்குறித்த வாதங்களை மற்றவர்களிடம் விட்டுவிடு கிறேன். இவைகளில் சாத்தான் மிகவும் பிரியப்படுகிறான் என்பதை அறிவதால். உங்களிடம் இணையதளமிருந்தால் (தேடமுடிந்தால்), "ஓய்வுநாள் மாற்றம்" (Sabbath change) என்கிற தலைப்பில் தேடிப் பாருங்கள். எண்ணமுடியாத யோசனைகளை அது கொடுக்கும். மிக அதிக நேரம் இதை நான் தேடிப் பார்த்திருக்கிறேன். கடைசி யாக உடைந்து போனேன். சிலருடைய எண்ணங்களைப் படிக்கும் போது நமக்கு உண்டாகிற கோபம், வெறுப்பு, ஏற்றுக்கொள்ளாமை, **நம்** கருத்தை நாம் நிரூபிக்க முயற்சிப்பது-இவையெல்லாம் தேவனுக்கும் மனிதகுலத்துக்கும் சத்துருவாயிருக்கிறவனுக்கு எத்தனை மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது!

எனவே, ஓய்வுநாளை ஆசரித்த சபைகள் ஞாயிறு ஆசரிக்கும் சபைகளாக எப்படி மாறிப்போயின என்பதைக் குறித்து எனக்கு அதிகம் தெரியாது என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். **ஆனால் எனக்குத் தெரிந்தவைகள்** சில உண்டு:

ஒன்று, தேவன்தாமே ஆதியிலே சொல்லி ஏற்படுத்தியிருக்கிற நியமங்களை மாற்றும்படியாக ஒரு முயற்சி நடக்கும் என்பதை வெகு காலத்திற்கும் முன்பாகவே தேவன் தமது வார்த்தையில் எழுதி வைத்திருக்கிறார் என்பதும், இயேசுவின் வாழ்க்கையால் உறுதிப்படுத்தப்பட்டு, ஆதி அப்போஸ்தலராலும் ஆதிகால

சபையாலும் கடைபிடிக்கப்பட்டுவந்தவைகளை மாற்றும் நோக்கோடு ஒரு அமைப்பு வரும் என்பதும், **எனக்குத் தெரியும்.**

இந்த அமைப்பு "உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, ***காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்***"-(தானி. 7:25)! ***"காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்"*** என்கிற வார்த்தைகளைக் கவனித்தீர்களா?

"*காலங்கள்*" என்பது ஏழாம்நாள் ஓய்வுநாள் ஆசரிப்பை முதல்நாள் ஞாயிறு ஆசரிப்பாக "மாற்றினதைக்" குறிக்குமோ?

"*பிரமாணங்கள்*" என்பது தேவனுடைய பத்துக்கற்பனைகளை சட்டங்களாகக் கொண்டிருப்பதை விடுத்து, உறவுகளுக்கும் விருப்பத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப இது சரி இது தவறு என்று "மாற்றிக்கொண்டதைக்" குறிக்குமோ?

இரண்டு, ஓய்வுநாளை ஆசரிக்கும் கிறிஸ்தவனாக இருப்பது உட்பட அநேக காரியங்களை வேதத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்பதைக்குறித்த ஒரு மாற்றம் பெரும்பாலான கிறிஸ்தவ சபைகளின் மனங்களில் ஏற்பட்டிருக்கிறது என்பது **எனக்குத் தெரியும்.** இந்த மாற்றம் நடந்த காலத்தைக் குறித்தும், இந்த மாற்றத்தில் ஈடுபட்டிருக்கும் அமைப்பு, மற்றும் நபர்களைக் குறித்தும் வாதிடலாம். வாதங்கள் சூடானதாகக் கூட இருந்திருக்கின்றன. ஆனால், மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பது **உண்மை.** (எனவே, மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா இல்லையா என்பதைக் குறித்து வாதிடுவது பொருளற்றது).

மூன்று, இப்படி மனங்களில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிற போதிலும், நூற்றாண்டுகள் நெடுகிலும், இதைக்குறித்து மற்ற செல்வாக்குகள் சொல்வதையும் சொன்னதையும் செய்யாமல், வேதவாக்கியம் சொல்லுகிறதை மாத்திரமே செய்ய ஒப்புக்கொடுத்த கிறிஸ்தவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதும் **எனக்குத் தெரியும்!**

அநேக புத்தகங்கள் இதைக்குறித்து எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் நான் சில உதாரணங்களை மாத்திரம் உங்கள் கவனத்திற்கு கொண்டுவருவதற்குப் பிரியப்படுகிறேன்.

இரண்டாம் நூற்றாண்டின் ஆதி கிறிஸ்தவர்கள்

"ஆதிகால கிறிஸ்தவர்கள், ஓய்வுநாளுக்கு மிகுந்த மரியாதையும் பயபக்தியும் காண்பித்தார்கள். அந்த நாளை தியானத்திற்கும் உபதேசங்களுக்கும் செலவளித்தார்கள். அநேக வேதவாக்கியங்கள் சொல்வதைப் போன்று அவர்கள் அப்போஸ்தலரிடமிருந்து இந்த பழக்கத்தைப் பெற்றிருந்தார்கள்." *Dialogue on the Lord's Day, p.189. London: 1701. By Dr. T.H. Morer* (*Church of England*).

மூன்றாம் நான்காம் நூற்றாண்டுகளில், கிழக்கத்திய மற்றும் அநேக உலகளாவிய சபைகளில்...

"முற்கால கிறிஸ்தவர்கள் சனிக்கிழமையை ஆசரிப்பதில் அல்லது ஏழாம்நாள் ஓய்வுநாளை ஆசரிப்பதில் மிக கவனமாயிருந்தார்கள். அனைத்து கிழக்கத்திய சபைகளும், உலகின் பெரும் பகுதிகளும் ஓய்வுநாளைப் பண்டிகைபோன்று ஆசரித்து வந்தனர். அவர்கள் யூத மார்க்கத்தால் பாதிக்கப்பட்டதினால் அல்ல, மாறாக, இயேசுவை-ஓய்வுநாளின் ஆண்டவரை-தொழுதுகொள்ளும்படியாக ஓய்வுநாட்களில் சபைகூடிவந்தனர் என்று **அத்தேனேசியஸ்** சொல்லுகிறார். **எபிபேனியஸ்**-ம் இவ்வாறே சொல்லுகிறார்." *Antiquities of the Christian Church, Vol. II. Book XX, chap 3, Sec. 1 66.1137, 1138.*

ஐந்தாம் நூற்றாண்டில், காண்ஸ்டான்டிநோபிளில்...

"கொஞ்சம் குறைய காண்ஸ்டான்டிநோபிளின் மக்கள் எல்லாரும் ஓய்வுநாளிலும் வாரத்தின் முதல் நாளிலும் சபைகளாகக் கூடினார்கள். இப்பழக்கம் ரோமிலோ, அலெக்சாந்திரியாவிலோ ஒருபோதும் இருந்ததில்லை." *Socrates, Ecclesiastical History, Book 7, chap. 19.*

இவ்வாறாக, அநேக உதாரணங்களைக் கொடுக்கமுடியும். ஆனால் நான் சொல்ல வந்ததை நீங்கள் கண்டுகொண்டீர்கள் என்று மெய்யாக நம்புகிறேன்-அதாவது, ஓய்வுநாளை ஆசரிக்கும் கிறிஸ்தவப் பழக்கம் அப்போஸ்தலரோடு அல்லது ஆதிகால சபையோடு முடிந்துபோகவில்லை. மெய்யான தேவனுடைய

வார்த்தைக்கு உண்மையாயிருப்பதின் முக்கியத்துவத்தை உணர்ந்த கிறிஸ்தவர்களின் பழக்கமாக அது தொடர்ந்துகொண்டிருந்தது.

நான்கு, கிறிஸ்தவ உலகத்தின் பெரும்பாலோரால் கொண்டுவரப் பட்ட மாற்றத்தை ஏற்றுக்கொள்ளவோ அல்லது ஓய்வுநாள் ஆசரிப்பு பழக்கத்தை மாற்றிக்கொள்ளவோ மறுத்த சிலர் தண்டனைகளை அனுபவித்தார்கள் என்பதும் **எனக்குத் தெரியும்.** நடக்கும் என்று யோவான் குறிப்பிட்டவைகளின் நிறைவேறுதல்கள்தான் இந்தத் தண்டனைகள். இந்த வசனத்தை நாம் முன்பே பார்த்தோம்; ஆனால் மீண்டும் ஒரு தடவை பார்ப்பது அவசியம். *“அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக்கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததி யான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று”*-(வெளி.12:17).

குறிப்பிடத்தகுந்த சில உதாரணங்கள் பின்வருகின்றன...

* “கிறிஸ்தவர்கள் சனிக்கிழமையில் சும்மாயிருக்கவோ, யூதர் களைப்போலிருக்கவோ கூடாது. அந்நாளில் வேலை செய்ய வேண்டும். ஆனால் கர்த்தருடைய நாளை அவர்கள் விசேஷ மாக கனம்பண்ணவேண்டும். கிறிஸ்தவர்களாக இருப்பதால், கூடுமானால் அந்தநாளில் வேலைசெய்யக்கூடாது. என்றாலும் அவர்கள் யூதர்களைப்போல நடந்துகொண்டால், கிறிஸ்துவை விட்டு வெளியேற்றப்படுவார்கள்.” *Catholic Church Council in Laodicea, 364AD, Canon 29.*

* “**வவுடாய்ஸ்** குழுவினர் கிறிஸ்துவைப் பின்பற்றி தேவனுடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படியத் தேடினபடியால், அவர்களைப்போன்று அடையாளம் காணப்பட்ட அனைவரும் மரணத்திற்குப் பாத்திர வான்கள் என்று விசாரணை செய்கிறவர்கள் அறிவித்தார்கள்.” *History of the Inquisition of the Middle Ages, H.C.Lea, Vol. 1.*

* “நம் ராஜ்யத்தின் வெவ்வேறு மாநிலங்களில் இருக்கிற சில மக்கள் சனிக்கிழமை ஆசரிப்பைக் கைக்கொண்டுவருகிறதாக எங்கள் பார்வைக்கு வந்திருக்கிறது. பரிசுத்த போப், ஆர்ச்பாதிரி அல்லது பாதிரியினுடைய கட்டளையைத்தவிர வேறு நாட்களை ஆசரிப்பது நம்முடைய பரிசுத்த சட்டத்தில் கடுமையாக

தடைசெய்யப்பட்டிருக்கிறது. சனிக்கிழமை ஆசரிப்பை, சபை சட்டம் கட்டளையிட்டாலொழிய வேறு எந்தச் சூழ்நிலையிலும் இதற்குப்பின் அனுமதிக்கக்கூடாது. எனவே, நார்வேயிலிருக்கும் பரிசுத்த சபைக்குக் கீழ்ப்படிந்திருக்க விரும்புகிற தேவனுடைய நண்பர்கள் அனைவருக்கும் ஆலோசனை சொல்வதாவது: இந்த **சனிக்கிழமையை ஆசரிக்கும் தீமையைத் தனிமைப் படுத்துங்கள். மீதமானவர்கள் அப்படிச்செய்தால் கடுமை யான தண்டனைக்குட்படுவீர்கள்.**" *Catholic Provincial Council at Bergen. 1435 Dip. Norveg., 7, 397.*

* **ஹாலந்து** மற்றும் **ஜெர்மனி:** 1529-ல் மரணதண்டனைவிதிக்கப் பட்ட தையரின் பர்பாரா இவ்விதமாகச் சொன்னார்: "தேவன் ஏழாம் நாளில் ஓய்ந்திருக்கும்படி எங்களுக்குக் கட்டளை கொடுத்திருக்கிறார்." *Martyrology of the Churches of Christ, commonly called Baptists, during the era of the Reformation, from the Dutch of T.J. Van Braght, London 1850, 1, pp. 113-114.*

* **ரஷ்யா:** "(ஓய்வுநாளை கைக்கொண்டதாக) குற்றஞ்சாட்டப்பட்ட வர்கள் அழைக்கப்பட்டனர். அவர்கள் தங்களுடைய புது விசுவாசத்தை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு அதைப் பாதுகாத்தனர். அவர்களில் முன்னோடிகளாயிருந்த மாநிலச் செயலர், குரிட்சன், கேசியன், நவ்கோராட்டிலுள்ள மடத்தின் நீதிபதியாகிய ஆர்கிமென்ரைட், ஐவன் மேக்ஸிமவ் போன்ற விசுவாசிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவர்கள் மாஸ்கோவில் டிசம்பர் 27, 1503 அன்று பொது இடத்தில் கூண்டுகளில் அடைக்கப்பட்டவர்களாக எரிக்கப்பட்டார்கள்." (*Council, Moscow, 1503*). *H. Sternberf, Geschichte der Juden (Leipzig, 1873), pp. 117-122.*

* **ஸ்வீடன்:** "சனிக்கிழமையை ஆசரிக்கிறதற்கு எதிரான இந்த வைராக்கியம் தொடர்ந்தது. சனிக்கிழமையை ஆசரிக்கும் பழக்கத்தைப் பலப்படுத்துகிற சிறிய காரியங்களுங்கூட தண்டிக்கப்பட்டன." *Bishop Anjou, Svenska Kirkans Historia efter Motet i Upsala.*

* **ஐரோப்பா:** 1520-ல், "லிச்டென்சியன் என்ற இடத்தினுடைய பிரபுவாகிய லார்ட் லெயோன்ஹார்ட், உண்மையான ஓய்வு

நாளாகிய சனிக்கிழமையை கடைபிடிப்பவராக இருந்ததால், அவருடைய எல்லைக்குள் ஓய்வுநாளை ஆசரித்த அநேகர் அடைக்கலம் பெற்றனர்." - *History of the Sabbath, J.N. Andrews, p. 649, ed.*

* **ருமேனியா** (1760): "இரண்டாம் ஜோசப்புடைய சகித்துக்கொள்ளும் பிரகடனம் (கட்டளை) ஓய்வுநாளை ஆசரிப்பவர்களுக்கு பொருந்தாததால்,அவர்களில் சிலர்(ஓய்வுநாளைஆசரித்தவர்கள்) தங்கள் சொத்துக்களை இழந்தனர்." *Jahrgang 2, 254.*

* **பொஹிமியா** மற்றும் **மொராவியா**: "ஓய்வுநாளை ஆசரிப்பவர்களின் நிலை (1635-1867) பயங்கரமாயிருந்தது. சுட்டெரிக்கப்படும்படி, அவர்களது புத்தகங்களும் எழுத்துக்களும் கார்ல்ஸ்-பர்க் திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட வேண்டியதாயிருந்தது." *Adolf Dux. Aus Ungarn, pp. 289-291. Leipzig,1880.*

இந்த அதிகாரத்தை முடிக்குமுன்னதாக நாட்காட்டியில் வந்த மாற்றத்தைப்பற்றிப் பார்ப்பது அவசியம். பள்ளியில் படிக்கும்போது இந்த உண்மையை நீங்கள் கற்றிருக்கலாம். ஆனால் நான் கற்றுக் கொண்டது எனக்கு உண்மையிலேயே ஞாபகத்தில் இல்லை. என் நினைவுக்கு வந்தமட்டில், நான் ஓய்வுநாளை ஆசரிக்கும் கிறிஸ்தவனாக மாறுவதால் தவறு செய்கிறேன் என்று என்னைச் சம்மதிக்கவைக்க, என் நண்பர் ஒருவர் இந்த "நாட்காட்டி மாற்றத்தை"(Calendar change) உபயோகித்த போதுதான், முதல்முறையாக இதைக்குறித்து அறிந்துகொண்டேன். அவருக்கு நான் எந்த பதிலையும் தரவில்லை. ஆனால் இதைக்குறித்து நான் தெளிவாக படித்தறிந்துகொள்ளத் தீர்மானித்து, அந்த முயற்சியில் ஈடுபட்டேன். அப்போது நான் கண்டுகொண்டது:

இயேசு இந்த பூமியிலிருந்தபோது உபயோகத்தில் இருந்த ஜூலியன் நாட்காட்டி வருட அளவில் மிகச்சரியாக இல்லை. அதில் ஒவ்வொரு வருடத்திலும் கால் மணி நேரம் விடுபட்டிருந்தது. இயேசு மரித்து 15 நூற்றாண்டுகளுக்குப் பின்பு கி.பி.1582-ல், கணக்கில் விடுபட்டிருந்த பத்து நாட்களை சரிசெய்வதற்காக போப் கிரகரி, கிரகோரியன் நாட்காட்டியைத் துவக்கினார். அதில் அந்த பத்து நாட்கள் சேர்க்கப்பட்டது. அதனால் 1582 அக்டோபர் 4 வியாழக்கிழமையைத் தொடர்ந்து, அக்டோபர் 15 வெள்ளிக்கிழமை

வந்தது. இந்த மாற்றம் இத்தாலியிலும் இன்னும் சில நாடுகளிலும் அந்த வருடமே நடைமுறைக்கு வந்தது. இங்கிலாந்தும், அமெரிக்காவும் தங்கள் நாட்காட்டிகளை 1752-ல் மாற்றின. ரஷ்யா 1914-ல் மாற்றியது. அதுவரையில் **இத்தாலி, இங்கிலாந்து, அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகள் வெவ்வேறு நாட்காட்டி களை வைத்திருந்தபோதிலும் ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய கிழமைகளின் வரிசை ஒவ்வொரு நாட்டிலும் அதே கிழமைகளாகவே இருந்தன. இவ்வாறு நாள் கணக்கு மாறினபோதும், வாரச்சுழற்சி பாதிக்கப்படவேயில்லை.** (குறிப்பு: மார்ச் 1-ல் ஜுலியன் நாட்காட்டியின் வருடக் கணக்கு துவங்கியது. ஆனால் ஜனவரி 1-ல் கிரகோரியன் நாட்காட்டி வருடத்தைத் துவங்கியது).

நான்கு வருடத்திற்கு ஒரு முறை நம் நாட்காட்டிகளில் ஒரு மாற்றம் ஏற்படுத்துகிறோம். அதை லீப் வருடம் என அழைக் கிறோம். ஒவ்வொரு நான்காம் வருடத்திலும், பிப்ரவரியின் முடிவில் ஒரு நாளைச் சேர்த்துக்கொள்கிறோம். ஆனால் இது வாரத்தின் கிழமைகளில் ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்துகிறதா? இல்லை. நாட்களின் எண்ணிக்கைதான் மாறுகிறது. அதைப்போலவேதான், பத்து நாட்கள் கூட்டப்பட்டபோதும் **எந்த மாற்றமும் கிழமைகளில் ஏற்படவில்லை.**

நாட்காட்டி மாற்றப்பட்டதா? ஆமாம். ஆனால் வாரச்சுழற்சி ஒருபோதும் மாற்றப்படவில்லை. ஜுலியன் நாட்காட்டி, கிரகோரியன் நாட்காட்டிக்கு மாறினபோது பத்து நாட்கள் கூட்டப்பட்டதும், மாதத்தில் நாட்களின் எண்ணிக்கை மாற்றப்பட்டதும் உண்மை. ஒரு வருடத்தில் நாட்களின் எண்ணிக்கை மாறியதும் உண்மை. ஒரு மாதத்தில் வாரங்களின் எண்ணிக்கை மாறியதும் உண்மை. ஒரு வருடத்தில் மாதங்களின் எண்ணிக்கை மாறியதும் உண்மை. **ஆனால் ஒரு வாரத்திற்கான நாட்களின் எண்ணிக்கையோ, தேவன் உலகத்தை உண்டாக்கினதிலிருந்து மாறவேயில்லை.**

கிறிஸ்துவுக்கு பல வருடங்கள் முன் வாழ்ந்த ஜுலியஸ் சீசர் காலத்திலிருந்து, மிகச்சரியான நாட்காட்டி சரித்திரம் நமக்கிருக்கிறது. வாரச் சுழற்சி எவ்வித மாற்றமுமின்றி நிலைத்திருந்ததாக அந்த சரித்திரம் சொல்லுகிறது. இயேசுவின்

காலத்தில் உபயோகிக்கப்பட்ட அதே வாரச் சுழற்சிதான் இன்றும் நமக்கிருக்கிறது. **அன்று ஓய்வுநாள் என்று அழைக்கப்பட்ட சனிக்கிழமையான வாரத்தின் ஏழாம் நாளை-அவருடைய நாளை-கர்த்தருடைய நாள் என்று இயேசு சொன்னார்.**

நான் ஏன் ஓய்வுநாளை ஆசரிக்கும் கிறிஸ்தவனாக இருக்கிறேன்?

* வேதாகமத்தின் கடைசி வார்த்தையாக "ஆமென்" என்ற வார்த்தை எழுதப்பட்டதற்குப் பின்னருங்கூட, ஏழாம்நாளே ஓய்வுநாளாக ஆசரிக்கப்பட்டதை சரித்திரத்தில் இருந்து கண்டுகொண்டதால், நான் ஓய்வுநாளை ஆசரிக்கும் கிறிஸ்தவனாக இருக்கிறேன்.

* வேதாகமத்தின் கடைசி வார்த்தையாக "ஆமென்" என்ற வார்த்தை எழுதப்பட்டதற்குப் பின்னும், "சக கிறிஸ்தவர்களால் உபத்திரவம் இருந்தபோதும்," ஏழாம் நாளே ஓய்வுநாளாக ஆசரிக்கப்பட்டதை சரித்திரத்திலிருந்து கண்டுகொண்டதால், நான் ஓய்வுநாளை ஆசரிக்கும் கிறிஸ்தவனாக இருக்கிறேன்.

* ஏழாம்நாளை ஓய்வுநாளாக ஆசரிப்பது **நிச்சயமாக இயேசுவுக்கு மகிழ்ச்சியைத் தரும்** (அது பிசாசை கோபப் படுத்துவதாயிருந்தாலும்) என்று ஏற்றுக்கொள்வதால், (இது மிக எளிமையானதாக இருக்கலாம்), நான் ஓய்வுநாளை ஆசரிக்கும் கிறிஸ்தவனாக இருக்கிறேன்.

எனது எண்ணம்

இந்த புத்தகத்தின் வார்த்தைகளை நான் எழுதி முடித்தபோது, நான் ஏழாம்நாளை ஆசரிக்கும் கிறிஸ்தவனாக மாறுவதற்கு மேற்கொண்ட பயணத்தை என் மனம் நினைவுகூர்ந்தது. அந்தப் பயணம் எப்போதும் இனிமையானதாக இருந்ததில்லை; ஆனால் அது பயனுள்ளதாக இருந்தது! பயணம் இலகுவானதாக இல்லை; ஆனால் அது என் கண்களைத் திறந்தது!

இந்தப் பயணத்தில் பயனுள்ளதாயிருந்து, என் கண்களைத் திறந்த பாடம் என்னவென்றால்:

* சிலவற்றை பெரும்பாலானோர் ஏற்றுக்கொண்டு அதன்படிச் செய்கிறார்கள் என்பதால், சிறுபான்மையினர் தவறானவர்களாகிவிடமாட்டார்கள். மற்றும் சிலவற்றை சிறுபான்மையினர் ஏற்றுக்கொண்டு அதன்படிச் செய்கிறார்கள் என்பதால், பெரும்பாலானோர் சரியானவர்களாகிவிடமாட்டார்கள்.

இந்தப் பயணத்தில் பயனுள்ளதாயிருந்து, என் கண்களைத் திறந்த மற்றொரு பாடம் என்னவென்றால்:

* ஒவ்வொரு கிறிஸ்தவனும் புரிந்துகொள்வதிலும் வளருவதிலும் வெவ்வேறு தரத்தில் இருக்கிறான். சில சமயங்களில் இந்த வித்தியாசம் மிகப் பெரியதாகத் தோன்றலாம். சில சமயங்களில் இந்த வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாததாயிருக்கலாம். இந்த வித்தியாசம் மிகப் பெரியதாகத் தெரிவதினால், அவனோ அவளோ தாழ்ந்த கிறிஸ்தவசகோதரனோ-சகோதரியோ அல்ல. அதேபோல, வித்தியாசம் தெரியாமல் இருப்பதால், அவனோ அவளோ உயர்ந்த கிறிஸ்தவ சகோதரனோ - சகோதரியோ அல்ல. எங்கள் குடும்பத்தில் நாங்கள் நான்கு சகோதரர்கள். நான்குபேரும் வித்தியாசமானவர்கள். சிலர் அதிக வித்தியாசமானவர்கள், சிலர் குறைவான வித்தியாசமானவர்கள். இதில் இருவர் ஒரே மாதிரியான இரட்டை பிள்ளைகள். எனினும் நாங்கள் சகோதரரே.

இந்தப் பயணத்தில் பயனுள்ளதாயிருந்து, என் கண்களைத் திறந்த மற்றுமொரு பாடம் என்னவென்றால்:

* நம் பிரயாணம் ஒருபோதும் முடிவதில்லை. தேவனுடைய ஆவியானவர் விரும்புவதை விடுத்து வேறொரு திசையில் பயணிக்கலாம். அல்லது தேவனுடைய பரிசுத்தஆவியானவரின் விருப்பம்(சித்தம்) நம் பயணத்தை நடத்த அனுமதிக்கலாம்— தெரிந்துகொள்ளுதல் நம்முடையதே.

இந்த புத்தகத்தை ஜெபத்துடன் ஆரம்பித்தது போலவே முடிக்கவும் விரும்புகிறேன்-எனக்காகவும் உங்களுக்காகவுமான ஜெபம்:

பிரியமுள்ள பரலோக தகப்பனே, *"நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருவோமாக. அவருக்கே இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக"*-(2 பேதுரு 3:18) என்பதே எப்போதும் எங்கள் வாஞ்சையாயிருப்பதாக ஆமென்.

மேலும் பிரதிகளுக்கு

ஆங்கிலத்தில்-**www.sabbathkeepingchristian.com**

“ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கும்” சபையின் போதனையில் வளர்க்கப்பட்ட நான், இப்போது மெய்யான ஓய்வுநாளை ஆசரிக்கும் கிறிஸ்தவனாக மாறினபடியால், “ஏன் சனிக்கிழமையில் ஆலயத்துக்குப் போகிறாய்? ஏன் இந்த மாற்றம்?” என்று அநேகர் என்னைப்பார்த்துக் கேட்டதுண்டு. “ஏன்?” என்ற கேள்விக்குப் பதில்தான் — இந்தப் புத்தகம்.

நீங்கள் “ஓய்வுநாளை ஆசரிக்கும்” கிறிஸ்தவராக இருப்பின், நீங்கள் பயணித்துக்கொண்டிருக்கும் பாதை, தகுதியான பாதைதான் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள இந்தப் புத்தகம் உதவும் என்று நம்புகிறேன். நீங்கள் பயணிக்கும் பாதை, அதுவாகவே, “ஞாயிற்றுக் கிழமையை ஆசரிக்கும்” கிறிஸ்தவரைக் காட்டிலும் உங்களை மேன்மையான கிறிஸ்தவராக ஆக்கிவிடாது. அதே சமயம், அவர்களைக் காட்டிலும் தாழ்வான கிறிஸ்தவராகவும் ஆக்கிவிடாது.

“ஓய்வுநாளை ஆசரிக்காத” கிறிஸ்தவராக இருப்பின், ஏன் அநேகர் விசித்திரமான இந்தப் பாதையைத் தெரிந்துகொண்டு இதில் தொடர்ந்து பயணிக்கப்போகிறார்கள் என்பதையும், அவர்களுடைய இந்த முடிவு நீங்கள் புரிந்துகொள்ள வேண்டிய ஒன்று என்பதையும் இந்தப் புத்தகம் திறந்து காண்பிக்கும் என்று நம்புகிறேன். அவர்களுடைய பாதை, அதுவாகவே, “ஞாயிற்றுக்கிழமையை ஆசரிக்கும்” உங்களைக் காட்டிலும் அவர்களை மேன்மையான கிறிஸ்தவர்களாக ஆக்கிவிடாது; அதே நேரம், தாழ்வான கிறிஸ்தவர்களாகவும் ஆக்கிவிடாது.

அநேக பெரிய புத்தகங்கள் இந்தத் தலைப்பில் எழுதப் பட்டிருக்கின்றன. தென்கு அமெரிக்காவில் சொல்லப்படுவதுபோல, சுருக்கமாகவும் இனிமையாகவும் இப்புத்தகத்தை உருவாக்க நான் தூண்டப்பட்டேன்.